# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,853 — 1969 මැයි 9 වැනි සිකුරාදා — 1969.5.9**

14,853 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு மே மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 463 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 483 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 494 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 501 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 502 |


### பதவிகள்—வெற்றிடம்

**"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"**

*1. **படிகள்.**—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. **கேள்விக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் கூட்டப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(1) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

***குறிப்பு.***—*சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5.* ***வேண்டிய தகைமைகள்.***—*விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6.* ***யுத்தசேவைச் சலுகை.***—*ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7.* ***பிற தேவைகள்.***—*(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8.* ***தகுதிக்கான் சம்பளத்தின் வரையறை.***—*தகுதிக்கான் சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. A. 31/X 1914/68

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தொழில்நுட்பக் கல்வி ஆலோசனையாளர் பதவி

மேற்குறித்த பதவி சம்பந்தமாக 25.4.68 ஆந் திகதிய 14,799 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் I ம் பகுதி II ம் பிரிவில் வெளிவந்த அறிவித்தலுக்குக் கவனம் கோரப்படுகிறது.

குறித்த விளம்பரத்தில் 4 (இ) ஆம் பந்தியின் (1) ஆம் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன ; இத்தகைமைகளை பெற்றுள்ள அபேட்சகர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

" 4. **தேவைப்படும் தகைமைகள் :—**

(இ)

**குறிப்பு** (1) 10 வருடத்துக்குக் குறையாத ஒரு காலம் வட்டார வித்தியாதிகாரிகளாக கடமை புரிந்தவர்களும் தொழில்நுட்ப மட்டத்தில் தொழிற்றுறைப் பாடங்களில் அல்லது எந்திரவியலில் தகைமைகள் பெற்றுள்ளவர்களுமானவர்களும், இவ்வமைச்சின் கீழுள்ள தொழில் நுட்ப நிலையங்களில் 5 வருடங்களுக்குக் குறையாத ஒரு காலம் சிரேட்ட அல்லது விசேட போதனசிரியர்களாகக் கடமை புரிந்தவர்களும் கைத்தொழில் கலைகளில் தொழில்நுட்ப மட்டத்தில் தகைமை பெற்றுள்ளவர்களும் அல்லது கைப்பணி படிப்பிப்பதில் சமமான தகைமை பெற்றுள்ளவர்களும் வருடாந்தம் ரூ. 4,800 க்குக் குறையாத சம்பளம் பெறுபவர்களுமானவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையவராவர். "

2. மேற்குறித்த தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து இப்பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள்,.1969.5.24.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.5.30.

**3. 25.4.68 ஆந் திகதிய 14,799 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தலுக்கமைய இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

4. முழு விபரங்களையும் 25.4.68 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியான அறிவித்தலைப் பார்க்கவும்.

டீ. ஆர். எஸ். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
28.4.1969.

5—95/1—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

இல. AB 47/X 2080/68

## விவசாயத் திணைக்களம்

### விவசாய உத்தியோகத்தர் பதவி

விவசாயத் திணைக்களத்திலுள்ள விவசாய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1969.5.24.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1969.5.30.

**குறிப்பு.**—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை இடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடர்க்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரியதுமாகும். நியமனம் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் முறையில் அமையும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

வருடம் ரூபா 4,080 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 க் கொண்ட 12 வருட உயர்வுகளாலும், ரூபா 480 க் கொண்ட 10 வருட உயர்வுகளாலும் ரூபா 13,200 வரை உயரும். (ரூபா 8,400 க்கு முன்பும், ரூபா 11,760 லும் வினைத்திறமை காண் தடையுண்டு. அத்துடன் 11,280 ல் இரண்டு வருடத்தடையுண்டு.)

**குறிப்பு.**—ரூபா 8,400 வினைத்திறமைகாண் தடைக்கு மேலாக பதவி உயர்வு பெற விரும்பும் எல்லா உத்தியோகத்தரும் குறிக்கப்பட்ட அரசாங்கப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.5.24 ம் திகதியில் 22 வயதிற்குக் குறையாதவராயும் 27 வயதிற்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் விவசாயச்சிறப்புப் பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தி எய்தியவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இறுதிப்பரீட்சை எடுத்து பெறுபேறுகளை எதிர்பார்த்து இருப்பவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பெறுபேறுகள் வெளிவந்த உடன் சித்தியடைந்தவர்கள் உடனடியாக எனக்கு அறிவித்தல் வேண்டும். தவறினால் அவர்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு) சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமையும் தொழில் நுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேரடியாக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பி அனுப்பல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியில் இருந்து 3 கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரியின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

10. 1968 ம் ஆண்டு மே மாதம் 10 ம் திகதிக்குரிய 14,801 ம் இலக்க அரசாங்க வர்த்தமானி விளம்பரத்தின்படி ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.4.28.

5–95/2—9.5.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,853

இல. A.33/X 2081/69

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் ஆங்கில (மொழி) விரிவுரையாளர்

### II ந் தர பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் ஆங்கில (மொழி) விரிவுரையாளர்—II ந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப் படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்,—1969.5.24
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்,—1969.5.30

குறிப்புகள்.—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடிதஉறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 4,080—12 × 360—8,400 வருடாந்தம்
(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரிய வேண்டும். தற்போது காலியிடங்கள் தெகிவலை, கேகாலை, பலாலி, பொல்கொல்லை, குளியாப்பிட்டிய, காலி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.
(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1969 ஆம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டம் பெற்றிருப்பதுடன்,
(ii) ஒரு பல்கலைக் கழகத்தின் 3 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர் கலாசாலைகளிலும் உயர்தரக் கல்வி மட்டத்திலும் அல்லது இவை எவற்றிலேனும் 6 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு அல்லது ஆங்கிலம் படிப்பிக்கும் முறையை ஒரு பாடமாகக் கொண்டு கல்வித் தகுதித்தேர்வுத் தகைமை பெற்றிருப்பவர்களுக்கு அல்லது ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பித்தலில் வெளிநாடுகளில் ஒரு கல்வி ஆண்டுக்குக் குறையாத காலத்துக்குப் பயிற்சி பெற்றிருப்பவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

(ஈ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில்தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).
(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.
(இ) குணச்சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.
(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.
(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது),
(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும்; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 28 ந உ.

5—95/3—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

AA 27 / X 2082/69

## அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### பொறியியலாளர் பதவி

### கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை

அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவையில் ஒரு பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தினால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்களைத் தயார் செய்து, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு என்ற முகவரிக்கு, பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அவற்றை அனுப்புதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 24.5.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 30.5.1969.

**குறிப்பு**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர், தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9" × 4" அளவிற் குறையாயாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு இணைத்து அனுப்புதல் வேண்டும். அத்துடன் பரீட்சார்த்தியாக தோற்றவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ள ஒரு உத்தியோகத்தரா அல்லது இல்லையா என்பதையும் விளக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள பரீட்சாத்திகள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அப் பரீட்சார்த்திகள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிலுள்ள அல்லது அந்நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். விதவை அனாதை இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு உதவுதொகை அளிக்கப்படும். இந்நியமனம் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும். அரசாங்கத்தில் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமான நியமனத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டால், குறிப்பிட்ட காலத்துக்கு இப்பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்.

**சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு : வருடத்துக்கு ரூபா 5,160—3 × 360—6,240/6,960—4 × 360, 10 × 480—ரூபா 13,200. வருடத்துக்கு ரூபா 11,280 சம்பள அளவினை அடைந்ததும், இரு வருடங்களுக்கு சம்பள உயர்ச்சி கிடையாது. (வருடத்துக்கு ரூபா 6,960 யும் ரூபா 11,280 யும் சம்பளமாக அடையுமுன்னர் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு).

**குறிப்பு**

(i) வருடம் ரூபா 10,800 சம்பள எல்லையை அடைந்ததும், மேலும் சம்பள உயர்ச்சி பெறுவதற்கு, பூரண உயர் தொழில் பயிற்சித் தராதரங்கள் இருத்தல் வேண்டும். ரூபா 10,800 சம்பள எல்லை ஒரு வினைத்திறமைகாண் தடையாகக் கருதப்படுகிறது.

(ii) பூரண உயர் தொழில் பயிற்சித் தராதரங்களைப் பெற்ற பின்னர் ஒரு உத்தியோகத்தர் இத்திணைக்களத்தில் சேருவாராயின், வருடத்துக்கு ரூபா 7,320 க்குக் குறையாத சம்பளத்தைப் பெறுவதற்கு தகைமையுடையவராவார்.

(iii) ரூபா 7,320 சம்பள எல்லையை அடையுமுன்னர் ஒரு உத்தியோகத்தர், பூரண உயர்தொழில் பயிற்சித் தராதரத்தைப் பெறுவாராயின் அதனைப் பெற்றவுடன், மேற்கூறப்பட்டுள்ள சம்பள எல்லையில் அவர் நியமிக்கப்படுவார். அப்படியான சம்பள மாற்றம் உத்தியோகத்தரின் தரத்தில் தொடர்பான முதுமுறை நிலைமையைப் பாதிக்காது.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும்,

(அ) சிறந்த குண இயல்பும் உடல் நலமும் உடையரென்றும் ;

(ஆ) 24.5.1969 ம் திகதியன்று 20 வயதிற்குக் குறையாதவர் என்றும் 26 வயதுக்கு மேற்படாதவரென்றும் (பொறி இயலாளராக தகமை பெற்றிருப்பவர்களுக்கு வயதுக்கட்டுப்பாடு தளர்த்தப்படும்);

(இ) (i) மின்சாரப் பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பி. எஸ். சி. பொறியியல் பட்டம் உடையனரென்றும் (கடைசி வருடப் பாடங்களாக இலத்திரனியலும் தந்திப் போக்குவரத்தும் எடுத்திருந்தால் விரும்பத்தக்கது) அல்லது

(ii) மின்சாரப் பொறியியல் இன்ஸ்டிரியூட் (லண்டன்) இன் பரீட்சையான பகுதி I, II, III (இலத்திரவினையலும் தந்திப் போக்குவரத்தும் பாடங்களாக எடுத்திருந்தால் விரும்பத்தக்கது) திருப்திகரமான சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) பரீட்சார்த்திகள் திருப்திகரமான பொறிமுறை உளச்சார்பு உடையவர்களாக இருத்தல் வேண்டும். தேவையானால் பரீட்சை நடாத்தி இதுபற்றி தீர்மானிக்கப்படும். தேர்வுச் சபை இதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

5. பின்வரும் சான்றிதழ்களில் சிலவற்றையோ அல்லது சகலதையுமோ தேவையான பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுவார்கள்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**மு. கு.** ஞானஸ்நான சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் பிரமாணங்களின் கோவைக்காக வழங்கப்படும் பிறப்புச் சார்பான சான்றிதழ் என்பன ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது உயர் கல்வித் தராதரச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றுப் பத்திரங்கள் அவற்றில் ஒன்று கல்விப் போதனை அதிபர், கல்லூரிப் போதனாசிரியர், அல்லது பேராசியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப தராதரச் சான்றிதழ்கள் அல்லது இரு துறைகளினதும் உள்ள சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்திய உயர் பரீட்சையின் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களையோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்து அனுப்பக்கூடாது.

(ii) சாதனங்களை சமர்ப்பிக்கும்படி கோரும் பொழுது, அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. **பிறதேசத்தில் பயிற்சி**

(i) ஐக்கிய இராச்சியத்திலோ அல்லது வேறு பொருத்தமான பிறநாடுகளிலோ வழங்கப்படும் விசேட பயிற்சி நெறியை மேற்கொள்ளுமாறு நியமனத்தாரர் வேண்டப்படுவார்.

(ii) அக்காலத்தில் நடை முறையிலிருக்கும் அரசாங்கத்தின் பிரமாணங்களுக்கு ஏற்ப பயிற்சி நெறிக்காலத்தில் ஊதியம் வழங்கப்படும்.

(iii) **உடன்படிக்கை.**—தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பிறவற்றுடன் குறிப்பிட்ட பயிற்சி நெறியை விசுவாசத்துடனும், உக்கத்துடனும் பின்பற்றி அதனைத் திருப்திகரமாக முடித்தும் ; பயிற்சி நெறியைத் திருப்திகரமாக முடித்து இந்நாட்டுக்கு வந்ததிலிருந்து அவசியமேற்படில் ஒரு குறிப்பிட்ட காலவரை (அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும்) இலங்கை அரசாங்கத்துக்கு சேவை செய்யும்படியும் ; உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உடன்படத் தவறினால் பயிற்சி நெறியின் முழுச் செலவினையும் மீளளிப்பதற்கும் (அதாவது இலங்கை அரசாங்க நிதியிலிருந்து அல்லது வேறு அரசாங்கத்தின் அல்லது தாபனத்தின் நிதியிலிருந்தோ பயிற்சி நெறிக்காகக் கொடுக்கப்பட்ட சம்பளம், படிகள், பயணச் செலவுகள் ஆகியன) இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்.

7. தகுதிகாண் காலத்தில் ஒரு பொறியியலாளர், தனது நடத்தையில் பயிற்சியின் முன்னேற்றத்தில், கடமை உணர்ச்சியில், இதன்கண் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் அஞ்சல் அதிபர் நாயகத்தையும் தந்திப் போக்குவரத்து அதிபரையும் திருப்திப்படுத்தத் தவறினால், எந்நேரத்திலும் அவர் சேவையிலிருந்து நிறுத்தப்படலாம்.

8. **இலங்கைக்குத் திரும்பியதும்.**—பொறியியலாளர் தரத்தில் நியமனத்தை உறுதிப்படுத்தல், மற்றையவற்றுடன் வழங்கப்பட்ட பயிற்சி சம்பந்தமான சகல குறிப்பிட்ட பரீட்சைகளிலும் சித்தியடைவதிலும் பயிற்சிக் காலத்திலும் பயிற்சி முடிவடைந்த பின்னரும் நடத்தையும் திறமையும் திருப்திகரமானதென சிபார்சு செய்வதிலும் தங்கியிருக்கிறது.

9. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதியின் பின்னர் இவ்வலுவலகத்தை வந்தடையும் இவ்வகையிலுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனல் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களால் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராக ஏற்றுக் கொள்ளப்பட்டு, காலதாமதமாகியதற்கு உரிய காரணங்களை எடுத்துக்கூறி, ஏற்றுக் கொள்ளும்படி திணைக்களத் தலைவர் சிபார்சு செய்வராஞல் ஏற்றுக் கொள்ளப்படும்.

10. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

11. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II) ஆம், பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

12. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது). அதன் கண் அறிவுறுத்த பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்தியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடன் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஏப்ரில் மீ 28 ந் உ.

5–95/4—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

இல. AA 36/X 2083/69

## பொதுக் கட்டுவேலைத் திணைக்களம்

### எந்திரவியற் பூகருப்பவியல் ஆராய்ச்சி நிறுவகம்

பொதுவேலைத் திணைக்களத்திலுள்ள ஆராய்ச்சி நிறுவகத்தில் எந்திர வியற் பூகருப்பவியலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங் களில் எழுதப்பெற்று, செயலாளர் அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள், 1969.5.24.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.5.30.

குறிப்பு : (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப் படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப் பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என் பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவ தற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்கத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அர சாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ண ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவல கத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவ சோதனையும் பயணச் செலவும் :**

இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோ கத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடைய வர்களாயிருக்கின்ருர்களா என்பதை உறுதிப்படுத்து வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல் லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

இப்பதவிகள் நிரந்தரமானவை ; ஆயினும் இளைப்பாற்றிச் சம்பள மற்றவை, அரசாங்க சேவை சகாயநிதிக்கு உதவுதொகை செலுத்த வேண்டும். 3 ஆண்டுகளுக்கு நியமனம் பரீட்சாத்தமாக இருக்கும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :

ரூ. 4,080—360 × 12, 480 × 10—13,200 வருடாந்தம் ; ரூ. 11,280 இல் இரண்டு வருடங்கள் தங்கல். ரூ. 8,400 ம் ரூ. 11,760 ம் பெறமுன் வினைத்திறமைகாண் தடை நியமனம் பெறுபவர், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பூகருப்பவியலில் விஞ்ஞான முதுமானிப்பட்டம் பெற்றவராக இருந்தால், மேற்படி சம்பளத்திட்டத்தில் வருட ஆரம்பச் சம்பளமாக ரூபா 5,160 இல் அமர்த்தப்படுவார்.

குறிப்பு : நியமனம் பெறுபவர் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பட்டதாரி மேற்படிப்பையாவது அல்லது விஞ்ஞானத்தில் அவருக்குரிய துறையில் உயர்தரமான தகுதித் தேர்வையாவது படித்துச் சித்தியடையாதுவிட்டால் இந்தச் சம்பளத்திட்டத்தில் வருடாந்தம் ரூ. 8,400 க்கு மேல் சம்பளம் பெற அருகதையு டையவராக மாட்டார்.

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.5.24 இல் 20 வயதற்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்பட்டாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே, அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வயதுக்கட்டுப்பாட் டின் மெலெல்லை அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பூகருப்பவியலில் முத லாம் அல்லது இரண்டாம் பிரிவில் சித்தியடைந்த சிறப்புப் பட்ட முடையவராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப்பத்திவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு :** சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும் / உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம்; தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைத் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சர்களின் விண் ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்புதல் வேண்டும், எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை

அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்படுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத் தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.4.28.

5–95/5—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

இலக்கம் AB.64/X2084/68

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### உப பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியிலுள்ள உப பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இலக்கம் 500, கொழும்பு 1, என்ற முகவரியிட்டு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 24.5.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 30.5.1969.

**குறிப்பு** : —(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்போர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிக்க கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்கு தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சொதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரித்தானதுமாகும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு: ரூ. 8,880—5 × 480—ரூ. 11,280—வருடத்திற்கு.

4. **தேவையான தகைமைகள் :**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) நன்கு மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டம் பெற்றவராயும் ஒரு நிருவாக பதவியில் குறைந்தது ஐந்துவருட அனுபவமாவது இருத்தல் வேண்டும், அல்லது

(ii) உயர் நீதி மன்றத்தின் மூன்று வருட அனுபவத்துடனுள்ள அப்புக்காத்தாகவோ அல்லது ஆறு வருட அனுபவத்துடனுளள் பிரக்கராசியாகவோ இருத்தல் வேண்டும், அல்லது சமமான உயர்தொழில்/கல்வித் தகைமையுடையவராய் இருத்தல் வேண்டும்.

(இ) 24.5.1969 ஆம் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.** : —இந்த வயதெல்லை அரசாங்க ஊழியர்களுக்குப் பார்க்கப்படமாட்டாது.

(ஈ) அபேட்சகர்கள் சப்பாத்தும் கால்மேசும் இல்லாமல உயரத்திலே 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாமலும், சாதாரண மார்பு அளவு 34 அங்குலத்திற்கு இருத்தல் வேண்டும். அவர்கள் உடல் நலமுடையவராயும் நல்ல ஆண்மையுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(உ) அபேட்சகர்கள் நியம கண்பரீட்சையில் கண்ணாடி இல்லாமல் " ஏ—2 " நியமத்தில் தேர்ச்சியடைய வேண்டும்.

**குறிப்பு**—(i) உதவி பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தருக்காக நடாத்தப்படும் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்த இப்பகுதி ஊழியர்களின் விண்ணப்பங்கள், கீழ்க்காணும் தகைமைகள் இருந்தால், இப்பதவி நியமனத்திற்குக் கருதப்பட உரித்தாவர்.

(அ) ஒரு நிருவாக பதவியில் பாதுகாப்பு வேலையில் குறைந்தது ஐந்து வருட அனுபவத்துடன், கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும், அல்லது,

(ஆ) பாதுகாப்பு வேலையில் பத்து வருட அனுபவம் உள்ளவரும் அதில் குறைந்தது ஐந்து வருடமாகிலும் நிருவாக பதவியில் வேலை பார்த்தவரும், சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது சிங்களம்/தமிழ், எண்கணிதம்/தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் எடுத்து கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும், அல்லது

(இ) பாதுகாப்பு வேலையில் 15 வருட அனுபவம் உள்ளவரும், அதில் குறைந்தது 10 வருடங்கள் ஆகிலும் நிருவாக பதவியில் இருந்திருக்க வேண்டும்.

(ii) விளையாட்டுகளில் திறமையிருந்தால் அதை கூடிய தகைமையாகக் கருதப்படும்.

(iii) இப்பகுதி ஊழியர்களுக்கு தேவையான கண்பார்வை நியமம் " ஏ–4 ".

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்பொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு(i) சாதனங்களாயினும், சாதனங்களின் படிகளாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையினுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர்கள் தம் விண்ணப்பங்களைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 28 ந உ.

5—95/6—9.5.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### குடிசார் எந்திரவியல் போதனாசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் குடிசார் எந்திரவியல் போதனாசிரியர் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " குடிசார் எந்திரவியல் போதனாசிரியர் பதவி " என எழுதப்பட வேண்டும். காலியிடங்கள் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திலுண்டு.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையினுள்ளவர்களுக்கு அமையாது) ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(iii) (அ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(இ) சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் குடிசார் எந்திரவியலில் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் (சிறப்புப் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்). செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எவ்வனுபவமேனும் பெற்றிருப்பவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும் ;

அல்லது

(v) குடிசார் எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமைப் பரீட்சையின் I ம், II ம் பகுதிகளில் தேறியிருக்க வேண்டும். (செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எவ்வனுபவமேனும் பெற்றிருப்பவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்) ;

அல்லது

(vi) குடிசார் எந்திரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். (செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எவ் அனுபவமேனும் பெற்றிருப்பவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்) ;

அல்லது

(vii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிப் பகுதியால் வழங்கப்படும் மாலைநேர எந்திரவியல் தராதரப் பத்திரமும் 5 வருட செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எதுவேனும் பெற்றிருக்க வேண்டும். (கீழ்க்காணும் ii ஆம் குறிப்பைப் பார்க்கவும்) ;

அல்லது

(viii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்விப் பகுதியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் எந்திரவியல் தராதரப் பத்திரமும் 5 வருட செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எதுவேனும் பெற்றிருக்க வேண்டும். (கீழ்க்காணும் ii ஆம் குறிப்பைப் பார்க்கவும்) ;

அல்லது

(ix) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரமும் 5 வருட செயல்முறை அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அல்லது இவற்றில் எதுவேனும் பெற்றிருக்க வேண்டும். (கீழ்க்காணும் ii ஆம் குறிப்பைப் பார்க்கவும்) ;

அல்லது

(x) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

குறிப்பு.—(i) சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றலை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் பெறவேண்டும்.

(ii) நியமதாரி போதிய செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவற்றில் எவ்வனுபவமேனும் பெற்றிருக்க வேண்டும் ; 5 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய நியமனம், வேண்டிய அனுபவம் பெற்றுக்கொள்ளப்படும்வரை, பதில் நியமனமாக அமைவதுடன் மாறாச் சம்பளமான ரூ. 3,420/- (வருடாந்தம்) இல் நியமிக்கப்படுவார்.

6. தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றுமாறு கோரப்படுவர்.

7. விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்ட விபரங்கள் ஏதேனும் பிழையானவை எனக் காணப்படின் விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், தெரிவு செய்யப்பட்டபின்னராயின் விலக்கப்படுதற்கும் உரியவராவர்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் 1 ம் பாகம் 2 ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

ரி. பத்மநாதன்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
த. பெ. 1138,
கொழும்பு 7,
1969 ம் ௵ ஏப்றில் ௴ 28 ந உ.

### நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வரைபட வல்லுனர் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ———.
   (அ) குடும்பப் பெயர் : ———.
   (ஆ) மற்றைய பெயர்கள் : ———.
2. அஞ்சல் முகவரி : ———.
3. தேசிய இனம் : ———.
4. (அ) விண்ணப்பக்காரர் பிறந்த திகதியும் இடமும் :———.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
   (ஆ) விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் கீழ் தரப்பட்டுள்ள (i) ஐ அல்லது (ii) யும் (iii) யும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவரயின் கீழ் தரப்பட்டுள்ள (i) யும் (ii) யும் அல்லது (ii) யும் (iii) யும் நிரப்புதல் வேண்டும்.
   (i) விண்ணப்பதாரரின் தந்தையார் பிறந்த இடம் : ———.
   (ii) விண்ணப்பதாரின் தந்தை வழிப்பாட்டனார் பிறந்த இடம் : ———.
   (iii) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டனார் பிறந்த இடம் : ———.
5. கல்வித் தகைமைகள், பரீட்சை நடைபெற்ற மாதமும், வருடமும், சித்தியெய்துள்ள பாடங்களும், ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற தரம் : ———.
6. பெற்றுள்ள தொழில் நுட்பத் தகைமைகள் : ———.
7. விண்ணப்பதாரர் விவாகமானவரா அல்லது தனித்தவரா ? ———.
8. பாடசாலையிலிருந்து விலகியபின் புரிந்த தொழில்கள் : ———.
9. தற்பொழுது பார்க்கும் தொழில், ஏதேனும் இருந்தால்:———.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்களும் நியமனங்களும் : ———.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் : ———.
திகதி : ———.

5-93—9.5.69 ந் திகதிய வர்த்தமனி இல. 14,853

---

## அரசினர் மின்சார முயற்சிகள் பகுதி

### தொழில் பயில்வோரை பயிற்சியளித்தலும் தேர்ந்தெடுத்தலும்
### தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், காசில்றே

தொழில் பயில்வோராக, காஸில்றேயில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிப்பதற்குத் தெரிவுசெய்யும் பொருட்டு, அடிப்படைத் தொழில்நுட்பக் கழகம், கொத்தலாவலபுரம், ஹார்டி தொழிநுட்பக் கழகம், அம்பாறை, கனிஷ்ட தொழில் பாடசாலைகள் அல்லது இலங்கைத் தொழிற் கல்லூரியின் பயிற்சி நிலையங்களிலுள்ள சித்திபெற்ற பயிற்சியாளரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் காணப்படும் விண்ணப்ப மாதிரிப் பத்திரத்தைப்போன்ற பத்திரத்தில் நிரப்பப்பட்டு 1969 ம் ஆண்டு, மே மாதம் 30 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **படியும், பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கான நிபந்தனைகளும்.**—தொழில் பயில்வோருக்கு காஸில்றேயில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் ஒரு வருட பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்படும். பயிற்சி பெறுவோர் இப்பயிற்சி காலத்தில் நிலைய்த்திலுள்ள விடுதிச்சாலையில் வதிந்து, தங்கள் எல்லா உணவுகளையும் பெறுதல் வேண்டும். மின்சார முயற்சிகள் பகுதித் தலைவரின் அங்கீகாரம் பெற்ற உணவுகள் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் உள்ள உண்டிச்சாலையில் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின்போது, பயிலுவோர் நாட்படியாக ரூ. 1.20 ம் அத்துடன் வாழ்க்கைச் செலவுப்படி, வாழ்க்கைச் சிறப்புப்படியும் பெறுதற்கு உரித்துடையவராவர்.

கீழ்வருவதற்கான செலவுகளைக் கழித்து, மிகுதியைத் தொழில் பயிலுவோருக்குக் கொடுக்கப்படும் :—

(அ) கொடுக்கப்படும் உணவின் விலை ;

(ஆ) புத்தகங்கள் வாங்குவது, பிரயாணம், உடுப்பு மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தின் அதிபரினால் தேவையென்று கருதி நிலையத்தில் அளிக்கப்படும் வசதிகளுக்கான செலவு ;

(இ) தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் விதிகள், பிரமாணங்களை மீறும் தொழில் பயில்வோருக்குத் தலைவரால் விதித்த குற்றப் பணம் (சிறிய குற்றம் புரியும் தொழில் பயிலுவோர் குற்றப் பணத்திற்கும் பாரதூரமான தவறு செய்பவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுதற்கும் பாத்திரராவர்).

பயிலுவோர் வகுப்புகளுக்கு வருவதற்கு தங்களுக்குத் தேவையான உடுப்பு மற்றும் மின்சார முயற்சிகள் பகுதித் தலைவரினால் அங்கீகாரம் பெற்ற விதிக்கப்படும் விடுதிச்சாலையில் பாவிப்பதற்கான பொருட்களும் தாங்களே சேகரித்துக் கொள்ளவேண்டும்.

3. **தேவையான தகைமைகளும், வயதும்.**—மனுதார் ஒவ்வொருவரும் தான்—

(அ) 1969 ம் ஆண்டு, ஜூன் மாதம் 1 ந திகதியன்று வயதில் பதினாறுக்குக் குறைந்தவரோ, இருபதிற்கு மேற்பட்டவரோ அல்லர் எனவும் ;

(ஆ) 7 ம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனவும்,

(இ) தேகாரோக்கியம் உடையவர் எனவும் ;

(ஈ) வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கையர் எனவும், திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4. **நியமன நியதிகள்.**—

(அ) தொழில் பயிலுவோர் தங்களுக்கு விதித்த படிப்பு நெறியை ஊக்கத்துடனும் விசுவாசத்துடனும் பின்பற்றுவதாகவும் பதவியில் சேர்க்கப்பட்ட நாளில் இருந்து 5 ஆண்டுக் காலத்தில் அரசாங்க சேவை செய்வதாகவும் ஓர் உடன்படிக்கை செய்வதுடன் பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர், இரண்டு பிணையாளர் இவர்களுடன் ரூபா 2,000/– க்கு ஒரு முறியில் உடன்பாடு செய்தல் வேண்டும். பயிற்சி வகுப்பைச் சித்திகரமாக முடித்து 1962 ம் ஆண்டு 5 ம் இலக்க பருவப்பத்திரத்தில் விதிக்கப்பட்ட தரத்தை அடைபவர்களை 3 ம் வகுப்புப் பதவிகளுக்கான வெற்றிடத்தில் நியமனம் அளிப்பதற்கு கருதப்படுவர். குறைந்தது மூன்று வருட காலம் 3ம் வகுப்புப் பதவியிலே நிறைவேற்றிய பின், அவர்களின் 2 ம் வகுப்பு உயர்ச்சிக்கான விண்ணப்பங்களை, மற்றையோருடைய விண்ணப்பங்களுடன் கருதப்படும்.

(ஆ) வேலையிலும் நடத்தையிலும் திருப்தியளிக்காத அல்லது அளிக்கப்படும் பயிற்சியைப் பயன்படுத்தாத தொழில் பயிலுவோர் எந்த நேரத்திலும் இடைநிறுத்தப்படுவதற்குப் பாத்திரராவர். இந்தத் திணைக்களத்திலே மேலும் பயிற்சி பெறுவதற்கு உரிமை கோருவதற்கும் தகுதியற்றவராவர். பரீட்சார்த்திகள் சாதாரணமாக ஓராண்டுக் காலத்தில் பயிற்சிநெறியை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரப்படுவர்.

(இ) தொழில் பயிலுவோர், தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், இதன் விடுதிச்சாலை, தொழிற்சாலை ஆகியவற்றின் சட்டப்பிரமாணங்களுக்கு இசைந்து நடக்கவேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தேகாரோக்கியம் உடையவர் என்று அதற்கான வைத்தியப் பரீட்சையில் சித்தி எய்தவேண்டும். அத்துடன் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்ற கடமைப்பட்டவராவர்.

(உ) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி, பதிவு செய்யும் பொருட்டு பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஊ) தொழில் பயில்வோரின் பயிற்சி சம்பந்தமான, மின்சார முயற்சிகள் பகுதித் தலைவரின் தீர்ப்பு முடிவானதாகும்.

5. (அ) ஓராண்டுப் பயிற்சியைச் சித்திகரமாக முடித்து, 1962 ஆம் ஆண்டு 5 ம் இலக்க பருவப்பத்திரத்தில் விதிக்கப்பட்ட தரத்தையடையும் பயிலுவோர் தொழிலாளர் பதவியில் 3 ம் வகுப்பு (காலித்தானங்களில்) நியமனத்திற்குக் கருதப்படுவர். இப்பதவிக்கான சம்பளம் முதல் ஆறு மாதங்களுக்கு ரூபா 1.80 ம் பிறகு வருடாந்தப்படி ரூபா 540—8 × 30 —1 × 24—804 ம் ஆகும். தொழில் பயிலுவோருக்கு இந்தத் திணைக்களம் இப்படியான பதவி நியமனங்களைச் செய்யுமென்று உறுதியளிக்காது. பயிலுவோரும் இப்பதவி நியமனங்களுக்கு உரிமைகோர இயலாது.

(ஆ) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள், அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறெதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

(இ) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தவும் முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தவும் இதுவரை ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கு இசைந்து நடக்க வேண்டுமெனக் கேட்கப்படுவர்.

6. பரீட்சார்த்திகளைக் கொழும்பில் ஓர் பரீட்சைக்கும், வாய்மொழிப் பரீட்சை ஒன்றுக்கும் அழைக்கப்படுவர். இதற்கு வருதற்கான பிரயாண செலவுகளோ, ஏனைய செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

7. இந்த வர்த்தமானியின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி (II) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. விண்ணப்பங்கள் அல்லது இவை பற்றிய கடிதப்போக்குவரத்து அரசாங்க மின்சார முயற்சிகள் பகுதித்தலைவர், த. பெ. 540, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டுமே அல்லாமல், திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

எம். ஐ. அவீஸ்,
பதில் தலைவர்,
அரசாங்க மின்சார முயற்சிகள்.

அரசாங்க மின்சார முயற்சிகள் பகுதி,
த. பெ. இல. 540,
கொழும்பு.
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 27 ந உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**தொழில் பயிலுவோர், தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், காசில்றே**

1. முழுப்பெயர் :————.
   (கொட்டை எழுத்துக்களில்)
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) மற்றப் பெயர்கள் :————.

2. முகவரி :————.

3. (அ) 1969 ஜுன் மாதம் 1 ம் திகதியன்று நிறைவான வயது — ———— வருடங்கள் ———— மாதங்கள் ————நாட்கள்.
   (ஆ) பிறப்புத் திகதி :————.

4. வம்சாவழியாகவா அல்லது பதிவாகவா இலங்கையர் என்பதைக் குறிப்பிடுக :————.

5. பின்வருவோரின் பிறப்பிடம் :—
   (அ) மனுதார் :————.
   (ஆ) மனுதாரின் தந்தை :————.
   (இ) மனுதாரின் பாட்டனார் :————.
   (ஈ) மனுதாரின் முப்பாட்டனார் :————.

6. மனுதார் விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா என்பதைக் குறிப்பிடுக :————.

7. சமூகமளித்த பாடசாலை, கல்லூரிகள், தொழினுட்பக் கழகங்களின் பெயர்கள் (இவற்றில் சேர்ந்த திகதிகளும் விலகிய திகதிகளும் உட்பட) —.
   (அ) பொதுக் கல்விக்காக :————.
   (ஆ) தொழினுட்பக் கல்விக்காக :————.
   (படசாலைகள், கல்லூரிகளினால் கொடுக்கப்பட்ட கல்வித் தராதரப் பத்திரங்களின் பிரதிகளும், தொழினுட்பக் கல்வி பயின்ற தொழினுட்பக் கழகத்தினால் கொடுக்கப்பட்ட தராதர அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.)

8. தொழினுட்பக் கழகத்திலிருந்து நீங்கியபின் செய்த தொழில்களின் விபரங்கள் :————.

9. வேறு ஏதாவது விசேடக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

10. மூன்று நற்சான்றிதழ்கள் கொடுத்துதவிய பொறுப்புள்ளவர்களின் பெயர்களும் தகுதிகளும் :————
    (நற்சான்றிதழ்களின் பிரதிகள் மாத்திரம் இணைக்கப்பட வேண்டும்.)

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என்றும் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களிலெதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ்செய்யப்பட பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றிப் பதவி நீக்கத்திற்கும், ஆளாகுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

5-110—9.5.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,853

## இலங்கை போக்குவரத்துச் சபை—காலிஸ்தானம்

சபையின் சேவையில் III ம் தரத்தில் பிரதிப் பிரதம கணக்காளர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—(எல்லாம் உட்பட) மாதாந்தம்—ரூபா 1,100—ரூபா 50—ரூபா 1,700. ரூபா 1,350 பெறும் போது வினைத்திறமைகாண் தடையுண்டு.

தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி, அவரின் தகைமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்பச் சம்பள அளவுத் திட்டத்தில் தகுந்ததோர் சம்பள நிலையில் அமர்த்தப்படலாம். வினைத் திறமைகாண் தடையைத் தாண்டுவதற்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபை வேலைக்குப் பொருத்தமான கணக்கு நடைமுறைகளையும் சட்டங்களையும்மொட்டிய பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டும்.

3. **தகைமைகள்.**—

(அ) 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆந் திகதியன்று 55 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும் ;

(ஆ) தத்துவம் பெற்ற கணக்காளர் இறுதிப் பரீட்சையில், இணைச் சங்க கணக்காளர் இறுதிப் பரீட்சையில் அல்லது பதிந்த கணக்காளர் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் அதன்பின்பு ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டு கால அனுபவமும் இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ம் ஆண்டின் 48 ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும் ;

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(1) நியமனத்திற்கு முன்பு உடலுறுதியுள்ளவர்கள் என்று வைத்திய பரிசோதனைக்கு ஆளாகிச் சித்தியெய்த வேண்டும் ;

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும் ;

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும் ;

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 15 % செலுத்தும் ;

(5) இலங்கையின் எப்பகுதியிலேனும், சபையின் எப்பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதியன்று, அல்லது அதற்கு முன்னதாக எனக்கு அனுப்பிவைகப்பட வேண்டும்.

200, கிருல வீதி,
நாராகென்பிட்டி, கொழும்பு 5,
1969 ம் ஆண்டு ஏப்றில் மீ 25 ந் உ.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

### இலங்கை போக்குவரத்துச் சபை
### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று (மூலப் பிரதியல்ல) இணைக்கப்படவேண்டும்).
5. 1.4.1969 திகதியன்று சரியான வயது—
வரு. : ———— மாதம் : ———— நாட். : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா : ————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்)
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக)
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள் உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்)
10. தொழினுட்பத் தகைமைகள் : ————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள் உயர்தொழில்தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்)
11. தொழில் : ————.
(பாடசாலையை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப்பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக)
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக) : ————.
13. விண்ணப்பத்திற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) : ————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? : ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? : ————.
அங்ஙனமாயின் விபரங்கள் தருக : ————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : ————.
(1) :————. (2) :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

5-120—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## அரசினர் மின்சாரத் திணைக்களம்
### தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள்

அரசினர் மின்சார திணைக்களத்தில் தற்காலிகத் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகட்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்தில் தயாரிக்கப்பட்டு 22.5.1969 அன்றோ அல்லது அதற்கு முன்போ அரசினர் மின்சாரத் திணைக்களப் பதில் முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பளமும் சேவை ஒப்பந்த நியதிகளும்.**—இப்பதவிகட்குரிய சம்பள அளவுத்திட்டம் வருடாந்தம் ரூபா 1,860—ரூபா 120—ரூபா 3,780 ஆகும்.

3. இப்பதவிகள் தற்காலிகமானவையாயும் இளைப்பாற்றுச் சம்பளச் சலுகை அற்றவையுமாகும். இப்பதவிகட்கு நியமனம் பெறுவோர் நிரந்தரப் பதவிகட்கு உரிமைகோரும் சலுகையோ, அல்லது நிரந்தர நியமனங்கள் பெறும் சலுகையோ தமக்கு உரிமையெனக் கொள்ள அருகதையற்றவராவர்.

4. சம்பளத்தில் 5% பொதுச்சேவை சேமலாபநிதிக்குச் செலுத்தப்படல்வேண்டும். நியமனம் பெறுவோர் விரும்பின் சம்பளத்தின் இன்னுமொரு 5% இந்நிதிக்குச் செலுத்தயுரிமையுடையர். நியமனம் பெறுவோர் இந்நிதிக்குச் செலுத்தும் தொகை எதுவாக இருந்தாலும், அரசாங்கம் இந்நிதிக்குச் செலுத்தும் தொகை நியமனம் பெறுவோர் ஒவ்வொரு நிதிவருடத்திலும் பெறும் மொத்த வேதனத்தின் 7½% க்குச் சமமாயிருக்கும்.

5. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்காணும் தகைமைகள் யாவும் உடையர் எனத் திருப்திகரமான அத்தாட்சிகளைக் காட்ட வேண்டும்.

(அ) 1969 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசினர் சேவையில் உள்ளவர்கட்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் எல்லை அமையாது),

(ஆ) திறமான நன்னடத்தையுள்ளவர்களாகவும் நல்ல உடல் நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை அல்லது இலண்டன் சர்வகாலசாலையால் நடாத்தப்படும் இன்ஜினியர் பட்டதாரிப் பரீட்சையின் முதலாம்பகுதி இறுதிப் பரீட்சையில் B. Sc. (Eng.) சித்தியடைந்தவர்களாகவோ அல்லது எ. எம். ஐ. இ. இ. (A.M.I.E.E.) பரீட்சையில் 1 ம், 2 ம் பகுதியில் (பழைய திட்டத்தின்படி எ. எம். ஐ. இ. இ. " அ " பிரிவு—Section " A ") சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவரவர் வேலை செய்யும் இலாகாத் தலைவர்கட்கூடாக அனுப்பப்படல் வேண்டும். இவ்விண்ணப்பங்களும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இத்திணைக்களத்தில் கிடைக்காவிடில் நிராகரிக்கப்படும். ஆயினும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மேற்கூறிய இலாகாத் தலைவர்கட்குக் கிடைத்து அத்தலைவர்கள் விண்ணப்பங்களை உடனடியாக இத்திணைக்களத் திற்கு அனுப்பமுடியாமற்போனதிற்குத் தகுந்த காரணத்துடன் அவற் றினை ஏற்கும்படி சிபாரிசு செய்து அனுப்பும் பட்சத்தில் அவையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற் றின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித்தராதரப் பத்திரம், தொழிற் தராதரப் பத்தி ரம் ஆதியன.

(ஆ) விண்ணப்பதாரிகள் இப்பதவிகட்குப் பொருத்தமுடையரா என் பது பற்றியும் அவர்களின் நன்னடத்தை பற்றியும் அண்மை யில் பொறுப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர் இத்தகைய நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கவேண்டியதில்லை).

8. விண்ணப்பங்களோ, அல்லது அவை சம்பந்தமாக எழுதப்படும் வேறு எந்தக்கடிதத்தொடர்புகளோ அரசின் மின்சாரத்திணைக்களப் பதில் முகாமையாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமேயொழிய, அவரது சொந்தப்பெயருக்கோ அல்லது இத்திணைக்களத்தில் தொழிலாற்றும் வேறு எந்த உத்தியோகத்தினரது சொந்தப் பெயருக்கோ அனுப்பப்படக் கூடாது.

9. இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு ( II ) ல் பிரசுரிக்கப்பட்டிருக் கும் பகிரங்க சேவை நியமனங்கட்கான பொது நிபந்தனைகளைக் கவனிக்க.

எம். ஐ. அலீஸ்,
பதில் முகாமையாளர்.

அரசாங்க மின்சாரத் திணைக்களம்,
த. பெ. இல. 540, கொழும்பு,
1969 ம் ஆண்டு ஏப்ரல் மீ 29 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள்

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) : ————.
(அ) கடைசிப் பெயர் : ————.
(ஆ) மற்றைய பெயர்கள் :————.

2. தபால் விலாசம் :————.

3. (அ) 22.4.1969 அன்று சரியான வயது —.
வருடம் : ————. மாதம் :————. நாள் : ————.
(ஆ) பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. சாதியமும் அது கிடைத்த விதமும் : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் —.
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் : ————.

6. விண்ணப்பதாரி, விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா ? (விவாகமாகியவராயின், விவாகமான திகதியை யும், எத்தனை பிள்ளை உண்டு என்பதனையும் குறிப்பிடவும்) :————.

8. கீழ்க்காணும் கல்வித்தகைமைகளை எவ்வெவ்பாடசாலையில் அல்லது கல்லூரியில் பெற்றீர் என்பதனைக் (அவ்வவ் கல்லூரியில் அல்லது பாடசாலையில் சேர்ந்த விலகிய திகதிகள் உட்பட) குறிப்பிடுக :
(அ) பொதுக்கல்வி : ————.
(ஆ) தொழிற்கல்வி : ————.

8. கல்வித்தகைமைகள் : ————.
(ஆகக்கூடிய கல்வித்தகைமை பெற்றமைக்கான அத்தாட்சிப்பத்தி ரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

9. தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆதியனவற்றில் அடைந்த தகைமைகள் : ————.
(ஏதாவதிருப்பின் அவற்றினைப் பெற்ற திகதிகளுடன் குறிப்பிடுக.) (அங்கீகரிக்கப்பட்ட ஓர் நிலையத்தின் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்த வராயிருப்பினும், தகுதித்தேர்வுப்பத்திரம் (டிப்ளோமா) பெற்றிருப் பினும் அல்லது ஒத்த வேறு தகைமைகள் பெற்றிருப்பினும் அவற்றினை அத்தாட்சிப்படுத்தக்கூடிய பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

10. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்ட காலம் முதல் பார்த்த தொழில் விவரங்கள், அவற்றில் சேர்ந்த, விலகிய திகதிகளுடனும் பெற்ற சம்பளங்களுடனும் குறிப்பிடுக :————.

11. விசேட தகைமைகள்/அனுபவம்/பயிற்சி யாதேனுமிருந்தால் அதன் விவரங்களைக் குறிப்பிடுக :————.

12. நற்சாட்சியளிப்போர் மூவரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் : ————.

13. விண்ணப்பதாரி நற்சான்றிதழ்கள் பெற்ற மூன்று தகைசான்றோ ரின் பெயர்கள், பதவிகள் ஆதியன : ————.
(அண்மையில்பெற்ற 3 நற்சாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) இணைக்கப்படவேண்டும்).

14. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா ? உள்ளவராயின் உமது கடன் விவரம் : ————.

15. மோட்டார் கார் உண்டா அல்லது மோட்டார் சைக்கிள் ஓடத்தெரியுமா? ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மை யானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன். இவ்விண்ணப்பத்தில் காணும் விவரங்கள் எதுவாயினும் பொய்யான தெனவோ அல்லது பிழையானதெனவோ தெரிவிற்குமுன் அறியவரும் பட்சத்தில் நான் தகைமையற்றவனாகக் கருதப்படுவேன் என்றும், தெரிவிற்குப்பின் தெரியவரின் எதுவித சன்மானமும் இன்றி வேலையி லிருந்து நீக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரின் கையொப்பம்.

திகதி : ————.

5-91—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### சிங்களச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள்

அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற் படி பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகைமையுடைய ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வகுப்புகள் ஏறத்தாழ ஒரு வருடம் தொடர்ந்து நடைபெறுமென எதி பார்க்கப்படுகிறது ; வகுப்புக்கள் கொழும்பில் அலுவலக நேரங்களில் நடைபெறும். ஏறத்தாழ 40 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. **தேவையான தகைமைகள்.**— ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும்.—

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும், (பரம்பரை வழியாக அல்லது பதிவு பெற்று இலங்கைப் பிரசையானவரே " இலங்கையர் " எனப்படுவர்) ;

(ஆ) (i) இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; சிங்களத்திலும், எண்கணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) கல்விப் பொது தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பெற்றி ருத்தல் வேண்டும் ; ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்ப துடன் சிங்களத்திலும், எண்கணிதம் தூயகணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தககணிதம் ஆகியவற்றுள் ஒருபாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சியடைந்திருப்பதுடன் ஒரே முறை யில் குறைந்தது ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) மேற்கூறப்பட்ட (i), (ii) ஆகியவற்றிற்குச் சமமான அல்லது அவற்றிற்கு மேலான பரீட்சைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) 25.5.69 அன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயிமிருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அல்லது சோதனைக்குச் சமுகமளித்தல் வேண்டும்; அவற்றிற்காகிய காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டா. விண்ணப்பத்திலுள்ள விவரங்களில் எதுவாயினும் பிழையாகவிருப்பது தெரிவுக்கு முன் காணப்படின் விண்ணப்பாரர் தெரிவுக்குரிய தன் தகைமைகளை இழப்பர். தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்படின் அவர் வகுப்பிலிருந்து நிறுத்தப்படுவதற்கு ஆளாவர்.

4. பயிற்சிக் காலத்தில் எவ்வகைப் படியாயினும் கொடுக்கப்பட மாட்டாது. பயிற்சிக் கால முடிவில் பரீட்சை ஆணையாளரால் ஒரு தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும். அப்பரீட்சையிற் சித்தியடையும் பயிற்சியாளருக்கு ஒரு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் இந்தத் திணைக்களத்திலோ, அரசாங்க சேவையிலோ தற்கலிகமாக வேனும், நிரந்தரமாகவேனும் வேலை கொடுக்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது.

5. பயிற்சிக் காலத்தில் காலத்துக்கு காலம் சோதனைகள் நடத்தப்படும்; அச் சோதனைகளின் பெறுபேறுகளின்படியே பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர். எப்பயிற்சியாளரினதும் வரவு, படிப்பு, பொதுத் தகுதி அல்லது நடத்தையில் இத்திணைக்களத்திற்குத் திருத்தியேற்படாவிடின் அன்னர் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாயினும் உடனடியாக நீக்கப்படுதற்கு ஆளாவர். அவ்வாறு நீக்கப்பட்ட பயிற்சியாளர் எவராயினும் பின்னர் வரும் பயிற்சி வகுப்புக்களிற் சேர்வதற்குத் தகவுடையராகார். காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் பிரமாணங்கள், அறிவுறுத்துரைகள் ஆகியவற்றிற்கு அமைந்து நடப்பதாக ஒரு உடன்படிக்கை, அதற்கெனவுள்ள ஒரு படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு ஒவ்வொரு பயிற்சியாளருக் வேண்டப்படுவர்.

6. பயிற்சியாளர் வேண்டுமென்று அசட்டை செய்தல், கவனமில்லா திருத்தல் ஆகியவற்றின் விளைவாகக் களஞ்சியப் பொருள்கள் காணமற் போவதாலும் உபகரணங்கள் முதலியன சேதமடைவதாலுமேற்படும் நட்டத்தை ஈடு செய்வதன் பொருட்டு ஒவ்வொரு பயிற்சியாளரும், வகுப்பிற் சேரும்போது, ரூபா 100 பிணை, இரண்டு பிணைகாரர் மூலம் கொடுத்தல் வேண்டும்.

7. இவ்வகுப்புக்களிற் சேர்வதற்காகிய விண்ணப்பங்கள் கீழ்க் காணும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு ஆணையாளர், அரசாங்க மொழி அலுவல்கள், த.பெ. 598, கொழும்பு 7, என முகவரியிட்டு, 1969 மே 25 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்; ஆணையாளரின் பெயருக்கு அனுப்பக்கூடாது.

பீற்றர். பீ. அபயசேகரா,
ஆணையாளர்,
அரச கரும மொழி அலுவல்கள்.

அரச கரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 27 ந உ.

**சிங்களச் சுருக்கெழுத்தாளர் பயிற்சி**

**வகுப்பிற் சேர்வதற்காகிய விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதுக)

2. முகவரி : ————.

3. தேசிய இனம் : ————.
(பரம்பரையான இலங்கையரா அல்லது பதிவு பெற்ற இலங்கையரா வென்பதைக் குறிப்பிடுக)

4. 25.5.69 அன்றுள்ள வயதும் பிறந்த தேதியும் :————.
(பிறப்புச் சான்றிதழ் (ஒரு படி மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்.)

5. ஆண்/பெண் :————.

6. மணமானவர்/மணமாகதவர் :————.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையும், பாடங்களும், திகதிகளுடன் :————.

8. இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்ப் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைத் தேர்ச்சியும் சாதாரணத் தேர்ச்சியும் பெற்ற பாடங்கள். (படிகளை இணைக்க. மூலங்களையல்ல, இன்னும் சான்றிதழ்கள் கிடைக்காவிட்டால் அவ்வாறு குறிப்பிடும் அதிபரின்/தலைமை ஆசிரியரின் சான்றிதழ் அல்லது வேறு செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) :

9. கல்வி கற்ற இடமும் தேதியும் :————.

10. சிங்களத்திற் பெற்ற விசேட தகைமைகள் உண்டாயின் அவை :——

11. சிங்கள/தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்திற் பெற்றுள்ள அனுபவம் ————.

12. இப்பொழுது ஏதாவது தொழில் செய்வதாயின் அத் தொழில் : ————.

13. பெற்றோர்/பாதுகாவலர் பெயரும் முகவரியும் : ————.

14. இரு நடுவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.

15. குணச் சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும், பதவிப் பெயர்களும் (படிகள் மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்; ஒரு சான்றிதழ் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் :————.
(மூன்று சான்றிதழ்கள்)

16. வேறு தகைமைகள் உண்டாயின், அவை : ————.

————,
விண்ணப்பாகரின் கையொப்பம்.

திகதி : ————.

5–94—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

# திருக்கோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம் கிழக்குப் பிரிவிற்கு பிறப்பு இறப்பும் கட்டுக்குளம் பற்று கிழக்குப் பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கட்டுக்குளம் கிழக்கு பிறப்பு, இறப்பு, பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு யூன் (ஆனி) மாதம் 5 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1969 ம் ஆண்டு சித்திரை மீ 22 ந உ.

5–103—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்புக்கு நியமனம் செய்வதற்குரிய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை — 1969

இலங்கை நிருவாக சேவைக் குறிப்பின் 23 ஆம் பந்திக்கிணங்க வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவி னால் கொழும்பில் 1969 ஆம் ஆண்டு ஓகத்து மாத அளவில் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் உள்ளபடியான தேதிகள் பின்னர் அறிவிக்கப் படும். பொது மக்களின் நலனுக்கு அவசியமானதென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதுமாயின் பரீட்சை நடத்தாமல் விட்டுவிடும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு. அரசாங்க சேவை ஆணைக்குழு அவசியமானதென அல்லது அறிவுக்கிசைந்ததெனக் கருதினால் பரீட்சையைத் தள்ளிப்போடலாம்.

2. **வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கை.**—(அ) இப்பரீட்சையின் பெறுபேற்றிலிருந்து நிரப்பப்பட வேண்டியுள்ள வெற்றிடங்களின் எண் ணிக்கை 15 என மதிப்பிடப்படுகின்றது. பொது மக்களின் நலனுக்கு அவசியமானதெனக் கருதினால், எந்தவொரு வெற்றுப் பதவியையேனும் அல்லது எல்லா வெற்றுப் பதவிகளையேனும் அரசாங்க சேவை ஆணைக்குழு நிரப்பாது விடலாம்.

(ஆ) நியமனம் செய்யப்படும் காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரசகரும மொழிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய நியம னங்களுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டால் சித்தியடைந்த பரீட்சார்த்திகளில் ஒருவரையேனும் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரையேனும் அங்ஙனம் நியமிக்காது விடும் உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு தன்மாட்டுக்கொண்டுள்ளதாகும்.

3. **விண்ணப்பஞ் செய்யும் முறை.** (அ) விண்ணப்பங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் எழுதப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு என முகவரியிடப்பட்டு அவ்வலுவலகத்தை 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 9 ந் திகதி திங்கட்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் சகல விதத்திலும் சரியாக வுள்ள தென்பதையும் விண்ணப்பப்படிவத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சான்றிதழில் தாம் கையொப்பமிட்டுள்ளாரென்பதையும் திணைக்களத் தலைவர் கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(இ) இப்பரீட்சைக்குரிய கட்டணம் 50/- ரூபாவாகும். இக்கட்டணம் விண்ணப்பம் முடிவடையுந் தே திக்கு முன்னர் சமீபத்திலுள்ள கச்சேரி களில் அல்லது கொழும்பு பொதுத்திறைசேரியில் செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணம் தலைப்பு VI, உப-தலைப்பு 3, (இனம் 4) என்பதில் இறைவரிக்கு வரவு வைக்கப்படல் வேண்டும். கச்சேரியினது அல்லது திறைசேரியினது பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தால் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றாமல்விடின் அல்லது விண்ணப்பத்தை மீளப்பெறின் அப்பரீட் சார்த்தி கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் மீளப் பெறுதற்கு உரிமையுடையவராகார்.

(ஈ) ஒரு விண்ணப்பப்பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணாமற்போய்விட்டது அல்லது தாமதப் பட்டுள்ளது என்னும் முறைபாடு ஏற்றுக்கொள்ளப்பமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவாராயின் அது அவர்கள் பொறுப்பாகும்.

(உ) விண்ணப்பப் பத்திரங்களுடன் வழங்கப்படும் அச்சடிக்கப்பட்ட அஞ்சல் அட்டையை (" அ " அடையாளமிடப்பட்டது) அதில் அறிவுறுத்தப் பட்டவாறு பூரணப்படுத்தி விண்ணப்பப்பத்திரத்துடன் அனுப்புமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். இவ்வலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பம் பெறப்பட்டமை அவ்வஞ்சல் அட்டை மூலம் அறிவிக்கப்படும். இந்நியதிக்கமையாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இந்த நியதிக்கமைய ஒழுகி, ஆனால், விண்ணப்பம் முடிவடையுந் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் ஒப்புக்கோடல் அறிவித்தலைப் பெறாத பரீட்சார்த்திகள், அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனடியாக அறிவிக்கும்படி வேண்டப்படு கின்றனர். இந்த நியதிக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் மறுபரிசீலனை எதுவும் செய்வதற்குக் கோரும் தகுதியை இழப்பர்.

4. பரீட்சார்த்தி எவரும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஐந்து தடவைகளுக்கு மேல் தோற்ற உரிமையற்றவராவர்.

5. **தகவுத்திறன்.**—பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றலாம் :—

(அ) 1969 ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று அரசாங்கத்தின் கீழ் 15 ஆண்டு நிரந்தரச் சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் அத்தேதியில் ஆண்டுக்கு 2,820/- ரூபாவுக்குக் குறையாமல் சம்பளம் பெறுபவர்களுமாகிய, பின்வரும் எழுதுவினைஞர்கள் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் :

பொது எழுதுவினைஞர் சேவை
கொழும்பு மின்சக்தி விநியோக எழுதுவினைஞர் சேவை
மின்சக்தித் திணைக்கள எழுதுவினைஞர் சேவை
இலங்கைச் சேமிப்பு வங்கி எழுதுவினைஞர் சேவை
இறப்பர் கட்டுப்பாட்டு எழுதுவினைஞர் சேவை
தேயிலைக் கட்டுப்பாட்டு எழுதுவினைஞர் சேவை
அரசாங்க அச்சக எழுதுவினைஞர் சேவை
ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவை
கல்வி எழுதுவினைஞர்கள்
துறைமுக பொறியியலாளர் எழுதுவினைஞர் சேவை
புகையிரத எழுதுவினைஞர் சேவை.

(ஆ) 1969 ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று அரசாங்கத்தின் கீழ் 10 ஆண்டு நிரந்தரச் சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் அத்தேதியில் ஆண்டுக்கு 3,300/- ரூபாவுக்குக் குறையாமல் சம்பளம் பெறுபவர்களுமாகிய, பின்வரும் திணைக்களத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் :—

| திணைக்களம் | பதவி |
|---|---|
| கமத்தொழில் சேவைகள் .. .. | மாவட்ட உத்தியோகத்தர்கள் |
| சமூக சேவை .. .. | அரசாங்க வயோதிபர், உடல்வலியற்றோர் விடுதிகளின் அத்தியட்சர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் |
| கூட்டுறவு .. .. | கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்கள் |
| பரீட்சை .. .. | பரீட்சை உதவி அத்தியட்சர்கள் |
| தொழில் .. .. | தொழில் உத்தியோகத்தர், தொழில்காண் நிலைய முகாமையாளர், கூலி நிருணயச் சபைச் செயலாளர் |
| உள்ளூராட்சி .. .. | பரிசோதகர், கிராமக் கட்டுவேலை அத்தியட்சர், நுண்ணாய்வு உத்தியோகத்தர் |
| சந்தைப்படுத்தல் .. .. | மாவட்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் |
| கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் .. | 1 ஆந் தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சிரேட்ட மேற்பார்வையாளர், புடவைவகை உதவியாளர், சிரேட்ட கிராம அபிவிருத்தி உதவியாளர்கள், கைத்தொழில் உதவியாளர், கிராம அபிவிருத்தி உதவியாளர் |
| உணவு .. .. | உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள், சாமர்ஸ் தானியக் களஞ்சியத் தடை உத்தியோகத்தர், தானிய அளவையாளர் |

| திணைக்களம் | பதவி |
|---|---|
| காணி ஆணையாளர் .. | .. குடியேற்ற உத்தியோகத்தர், மேற்பார்வையாளர்கள்—கா. அ. க. துண்டுகள், கச்சேரி நில அளவையாளர் |
| மோட்டார் போக்குவரத்து .. | .. மோட்டார் வாகனப் பரீட்சகர் |
| பொதுத் திறைசேரி .. | .. ஆய்வு உத்தியோகத்தர்கள் |
| குடிவரவு, குடியகல்வு .. | .. அதிகாரம் பெற்ற சிரேட்ட உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் |
| தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | .. மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர், போதனாசிரியர்/பரிசோதகர் |
| சுகாதாரம் .. | .. ஆசுப்பத்திரிச் செயலாளர்கள், செயலாளர், கொழும்புத் தொகுதி ஆசுப்பத்திரிகள் |
| நன்னடத்தைப் பாதுகாவலும் குழந்தை பேணற் சேவைகளும் | பாடசாலை அதிபர், பாடசாலைத் தலைவிகள், விடுதி அதிபர்கள், விடுதித் தலைவிகள், நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள், மாணவர் இல்ல மேற்பார்வையாளர்கள் |
| ஆயுள்வேதம் .. | .. வைத்தியசாலைச் செயலாளர் |

(இ) வேறு எந்த உத்தியோகத்தரையும் இப் பரீட்சையில் போட்டியிட அனுமதிக்கும் உரிமையை அரசாங்கசேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

6. **அடையாளச் சீட்டுக்கள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நியதிச் சட்ட முறையான தாபனம் ஒன்றின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

7. **பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.**—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்வதற்கு ஏதுவாகும். பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்குட்பட்ட பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

8. (அ) **பரீட்சைத் திட்டம்.**—பின்வரும் பாடங்களை எடுக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர் :

| | கட்டாய பாடங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | கட்டுரை (இரண்டு மணித்தியாலம்) .. .. .. .. | 150 |
| (2) | சுருக்கியெழுதல் (ஒரு மணித்தியாலம்) .. .. .. .. | 50 |
| (3) | தற்கால நிகழ்ச்சிகள் (ஒரு மணித்தியாலம்) .. .. .. | 100 |
| (4) | பொது அறிவு (இரண்டு மணித்தியாலம்) .. .. .. | 100 |
| (5) | இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார அபிவிருத்தி, இத்துறைகளில் தற்கால இலங்கையின் அபிவிருத்தி பற்றி விசேடமாக அறிந்திருத்தல் வேண்டும் (இரண்டு மணித்தியாலம்) .. | 100 |
| (6) | வாய்மொழிப் பரீட்சை .. .. .. .. | 200 |
| | எழுத்துப் பரீட்சையில் போதியளவு உயர்தரம்பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். | |
| (7) | விருப்புரிமைப் பாடம் .. .. .. .. | 100 |

பின்வரும் விருப்புரிமைப் பாடங்களில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர். விருப்புரிமைப் பாட வினாத்தாள் இரண்டு மணித்தியாலத்துக்குள்ளதாகும். அவ்வினாத்தாள் சிறப்பாக இலங்கை தொடர்பாகவே இருக்கும். அவ் வினாத்தாளின் விரிவுக்குள் அடங்கியவாறான அரசாங்கத் திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் தொழில்படும் முறைபற்றியும் அவற்றின் பிரச்சினைகள் பற்றியும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும்வண்ணம் அவ் வினாத்தாள் அமையும் :—

(1) கைத்தொழில், வர்த்தகம், வியாபாரம்.
(2) அரசாங்க நிதித்துறை.
(3) கூட்டுறவு, விவசாயம்.
(4) தற்கால இலங்கை அரசாங்கம்.
(5) கல்வி, பண்பாட்டு அலுவல்கள்.
(6) சுகாதாரம், தொழில், சமூக சேவை.
(7) போக்குவரத்தும் அரசாங்கப் பயன்படுதுறைகளும்.
(8) இலங்கையின் சட்ட முறையும் ஒப்பந்தங்கள், குடியியல் குற்றங்கள் பற்றிய சட்டமும் அல்லது ஆட்கள், சொத்துக்கள் பற்றிய சட்டமும்.
(9) பொது விஞ்ஞானம்.

மு. க.—பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டுவதற்காக, மேற்கூறப்பட்ட விருப்புரிமைப் பாடங்களின் கீழ் பொதுவாகத் தொகுக்கப்படும் அரசாங்கத் திணைக்களங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) **கைத்தொழில், வர்த்தகம், வியாபாரம்.**—வர்த்தகத் திணைக்களம், இறக்குமதி, ஏற்றுமதித் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், வணிகக் கப்பல் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம், கொம்பனிப் பதிவாளர் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், சிறு கைத்தொழில் திணைக்களம்.

(2) **அரசாங்க நிதித்துறை.**—திறைசேரி, அரசாங்கப் பண்டசாலை, உண்ணாட்டு இறைவரி, தொகை மதிப்பு, புள்ளிவிவரம், தேசிய திட்டமிடல், உபகாரச் சம்பளம், பொதுப்படுகடன், கடன் உதவு சபை, அரசாங்க அச்சகம், தேசிய சேமிப்பு, சகாயநிதி, சுங்கம்.

(3) **கூட்டுறவு, விவசாயம்.**—காணி, நில அளவை, காடு நீர்ப்பாசனம், வன சீவராசி, விலங்கினக் காட்சிச்சாலை, விவசாயம், உணவு, கூட்டுறவு, கமத்தொழில் சேவை, சந்தைப்படுத்தல், தென்னை மறுசீரமைப்பு, விலைமதிப்பு.

(4) **தற்கால இலங்கை அரசாங்கம்.**—அமைச்சர் சபை அலுவலகம், மூதவை, பிரதிநிதிகள் சபை, கணக்குப் பரிசோதனைத் திணைக்களம், தேர்தல் திணைக்களம், மாகாணப் பரிபாலனம், உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கண்டி சிறுநிலக் கமக்காரர் விசாரணைக்குழு, நாடு, நகர்த் திட்ட அமைப்பு, பதிவாளர் நாயகம், பொலிசு, மதுவரி, வெளிநாட்டு அலுவல்கள், குடிவரவு, குடியகல்வு, படைப் பிரிவுகள்.

(5) **கல்வி, பண்பாட்டு அலுவல்கள்.**—கல்வித் திணைக்களம், தொழில் நுட்பக் கல்லூரித் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், வளிமண்டல ஆராய்சசித் திணைக்களம், நுண்கலைக் கல்லூரித் திணைக்களம், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், அரசாங்கப் பொதுச் சுவடித் திணைக்களம், தேசிய நூதனசாலைத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், அடிப்படைத் தொழில் நுட்பப் பயிற்சிக் கழகம், ஒலிபரப்பு, தகவல் திணைக்களம்.

(6) **சுகாதாரம், தொழில், சமூக சேவை.**—சுகாதாரம், வீடமைப்பு, ஆயுர்வேதம், தொழில், சமூக சேவை, நன் நடத்தைப் பாதுகாவல், குழந்தை பேணற் திணைக்களம், சிறைச்சாலை.

(7) **போக்குவரத்து, அரசாங்கப் பயன்படுதுறைகள்.**—அரசாங்கக் கட்டுவேலைகள், அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்து, மோட்டார் போக்குவரத்து, புகைவண்டி, குடியியல் விமானப் போக்குவரத்து, கப்பற்றுறை ஆணையாளர், கரையோர வெளிச்சம், நீர் விநியோகம், வடிகால், மின்சக்தி.

(8) **இலங்கையின் சட்டமுறை.**—நீதி மன்றங்கள், பிசுக்கால், இணக்கச் சபைகள், கைலஞ்ச ஆணையாளர், அரசாங்க இரசாயனப் பகுப்பாளர், பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர், பள்ளிவாசல், முசிலீம் தர்ம நம்பிக்கைச் சொத்துத் திணைக்களம்.

(ஆ) **பரீட்சை மொழி.**—எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள், அத்தகைய சேவையில் சேர்வதற்குரிய தகைமைப் பரீட்சையை/வாய் மொழிப் பரீட்சையை எம்மொழியில் செய்து சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே இப் பரீட்சையில் விடை எழுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைப் பரீட்சையை/வாய்மொழிப் பரீட்சையை வேறுவழியில் செய்து சித்தியடைந்தவர்கள், அவர்கள் அவ்வாறு விரும்பினுல் அரசகரும மொழியில்—சிங்களத்தில் இப் பரீட்சையில் விடை எழுதலாம். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் பாடத்தெரிவிலும், மொழி மூலத்திலும் மாற்றம் எதுவும் அநுமதிக்கப்பட மாட்டார்கள்.

9. இச் செய்திமடலின் I ஆம் பகுதி II ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
கொழும்பு, 1969 ம் ஆண்டு எப்பிரல் மீ 27 ந் வ.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

5-72—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## பரீட்சைப் பகுதி, இலங்கை

**மருதானை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம், இரத்மலானை, காலி, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல், அனுராதபுரம், கேகாலை, வதுளை கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள் ஆகியவற்றிலும் கட்டுப்பெத்த இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரியில் நுண்தொழிலாளர் மட்டத்தில் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கும் 1969 ம் ஆண்டு அனுமதிப்பதற்கான பரீட்சைப் பிரமாணங்கள்**

மேற்படி பரீட்சை சம்பந்தமாக 18.4.1969 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களின் தமிழ் மொழி பெயர்ப்பில் குறிப்பிடப்பட்ட வயது எல்லை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:

22 தொடக்கம் 32 வரையுள்ள பயிற்சி நெறிகளுக்குரிய பரீட்சார்த்திகள் 1.10.1969 அன்று 18 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கு பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு மே மாதம் 22 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு எப்பிரல் மீ 29 ந் வ.

5-174—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

## அளவையியலிலும் மட்டமாக்கலிலும் பரீட்சை

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான நில அளவையும் மட்டமாக்கலிலும் சம்பந்தமான வருடாந்தப் பரீட்சை எழுத்து, செய்முறை ஆகிய இரு பகுதிகளிலும் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் திகதியும் செய்முறைப் பரீட்சை 1969 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 21 ம் திகதியும் ஆரம்பமாகும்.

2. எழுத்துப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். செய்முறைப் பரீட்சை கொழும்பு மாவட்டத்தின் எப்பகுதியிலாவது நடாத்தப்படும்.

3. (அ) இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு, பிரமாணங்களுக்கு அமைய விதித்த விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்பத்திரங்களைக் கொழும்பு 5, கிருல வீதியில் உள்ள நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பத்துடன் கீழ்வரும் சான்றிதழ்களின் மூலங்கள் இணைக்கப்படல் வேண்டும் :—

(1) கணிதசாஸ்திரத்துடன் (Mathematics) சித்தியெய்திய சிரேஷ்ட தராதரப் பத்திரம் (ஆங்கிலம்) பரீட்சையின் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் அல்லது அதற்கு உயர்தரமான பரீட்சையின் சித்தியெய்தியமைக்குரிய சான்றிதழ்.

(2) இலங்கை நுண் தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் அல்லது மட்டமிடுபவர் அல்லது நில அளவையாளரும் மட்டமிடுபவரிடம் நில அளவையில் அல்லது மட்டமாக்கலில் அல்லது நில அளவையிலும் மட்டமாக்கல்களிலும் பரீட்சைக்கு முன் ஆகக் குறைந்தது ஓராண்டாவது பரீட்சார்த்தி கற்றதாகக் கூறும் சான்றிதழ்.

**குறிப்பு.**—கணித சாஸ்திரம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் உட்பட வேறும் மூன்று பாடங்களுடன், இரு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் சித்தியெய்திய, பொதுக் கல்வி தராதரப் பத்திரம் (சாதாரண நிலை) சிரேஷ்ட தராதரப் (ஆங்கிலம்) பத்திரத்துக்குச் சமமாகக் கருதப்படும்.

4. பரீட்சார்த்திகள் விண்ணப்பம் ஏற்கும் முடிவு தேதிக்கு முன்பு அதாவது 1969 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதிக்கு முன்பதாக கீழ்க்காணும் பரீட்சைக் கட்டணங்களை நில அளவையாளர் நாயகமவர்களிடம் செலுத்தல் வேண்டும். :—

| | | ரூபா |
|---|---|---|
| நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் | .. | 30 |
| மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் | .. | 30 |
| நில அளவையும் மட்டமாக்கலும் பரீட்சைக்கு | .. | 50 |

5. எழுத்துப் பரீட்சைக்குரிய பாடங்கள் பின்வருமாறு :—

(அ) ஆங்கிலம்—ஒரு கேள்வித்தாள்—பரீட்சார்த்தியின் ஆங்கில அறிவையும் ஆதிக்கத்தையும் அளவிடுதற்கான கேள்விகளிலும் கட்டுரையிலும் பயிற்சி.

(ஆ) எண் கணிதமும் அட்சரகணிதமும்—ஒரு கேள்வித்தாள்.

எண்கணிதம்—முழு இலக்கங்களுக்கும் பொதுப் பின்னல்களுக்கும் தசமப் பின்னங்களுக்கும் பயன்படும் எண்கணிதத்தின் தத்துவங்களும் செய்முறையும். மீற்றர் அளவுமுறை. குறிக்கப்பட்ட திருத்தத்தின் அளவுக்குக் கிட்டத்தட்டச் சரியாக்கல். தசமங்களினதும் விகிதங்கள், விகிதசமன்களினதும் பெருக்கல் பிரித்தற் சுருக்க முறைகள். நூற்றுவீதம், சராசரிகள். எண்கணிதத்தின் செய்முறைப் பிரயோகம்.

அட்சரகணிதம்—எண்கணித அட்சரகணித விதிகளது பொது முடிபுகளின் குறியீட்டுக் கோலையும் அவற்றின் பிரயோகமும். எளிய, ஈருறுப்பு, இருபடிக்கோவைகளின் காரணிகள் (மூலக்கூறுகள்). முதற்படி அல்லது இரண்டாம்படிச் சமன்பாடுகளும் அவற்றுக்கு வழிகாட்டும் பிரச்சினைகளும். வர்க்கமூலம். எளிய விகிதமுறுகின்ற முழு வெண்ணுக்குரிய அட்சரகணிதச் செயற்கூறுகளைக் காட்டும் வரைபுகள். கூட்டல் விருத்தியும் இசையிடைவிருத்தியும். பெருக்கல் விருத்தி. சுட்டிகளினதும் மடக்கைகளினதும் அறிமுறையும் மடக்கை வாய்பாட்டுப் பயன்பாடும். ஒரு நேரான முழு வெண்ணுக்குரிய சுட்டியின் ஈருறுப்பு அறிமுறை.

(இ) கேத்திர கணிதமும் திரிகோண கணிதமும்—ஒரு கேள்வித் தாள். கேத்திர கணிதம்—ஒப்பிடத்தக்க நீளம் கொடுக்கப்பட்டுள்ள அடித்தளங்களையும் குறுதுயரங்களையும் கொண்ட முக்கோணங்களினதும் இணைகரங்களினதும் பரப்புகளையும் இலகுவான ஒழுக்குகளையும் சேர்த்து எளிய உய்த்தறிதல்களை விளக்கும் யூக்கிளிட் ((i)—(iv)) இன் பாடங்கள். (கேத்திர கணிதத் தேற்றங்களுக்குரிய எல்லா நிறுவல்களும் கேத்திரகணிதச் சார்பானதாயிருக்க வேண்டும். யூக்கிளிட்டினுடைய நிறுவல்கள் வற்புறுத்தப்படமாட்டா). இயல்பொத்த உருவங்கள், வட்டத்தின் அளவியல். கனம், நீள்சதுரக்கண்டம், நான்முகி, கோளம், உருளை, ஆப்பு, கூம்பகம், கூம்பு எனப்படும் எளிய திண்டி உடல்களின் அளவியல்.

திரிகோணகணிதம்—முக்கோணங்களின் தீர்வும் அதுவரையுள்ள பகுதியும் (முக்கோணங்களின் செய்முறைத் தீர்வுகளையும் அவற்றின் பிரயோகங்களையும் சேர்த்து). மடக்கை வாய்பாட்டினதும் பிறவாய்பாடுகளினதும் பிரயோகத்தை உள்ளடக்கும் எண்ணுதாரணங்கள்.

(ஈ) அளவையியல்—ஒரு கேள்வித்தாள்—சங்கிலியளவை.

திருஞ்சிற்றியொடயிற்களும் திரேடிள் தியொடவியற்களும், அவற்றின் பிரயோகமும், அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும். தளச் செவ்கோண ஆள்கூறுகள், வளைகோட்டு வீச்சீடு, எதிரமைமுறைகள் தக்கியோகமானம் முதலியவற்றின் பயன்களையும் காட்டும் தியொடலயிற்போகுகளும் திசைகாட்டிப் போகுகளும். தளமேசை அளவை. தனமுக்கோணவாக்கம். வானியல் நோக்கல்களினுல் திசைவில்லைக் கணித்தல்.

(உ) மட்டமாக்கலியல்—ஒரு கேள்வித்தாள்.

டம்பி மட்டமும், "Y" மட்டமும் குக்கின்பின் திருப்பும் மட்டமும் அவற்றின் பிரயோகமும் அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும். மாட்டமாக்கலின் அறிமுறையும் செய்முறையும். மண் வேலையைக் கணித்தல். புகையிரதப்பாதை அளவைகளும் தெரு அளவைகளும், அவற்றைத் தரையிற் குறித்தலும். நீர் விநியோகத்திற்கான அளவைகள். உரு வரைகளும், அவற்றிலிருந்து, அவற்றால் அடக்கப்பட்ட பகுதிகளைக் கணிப்புச் செய்தலும்.

கேள்வித்தாள்கள் (அ), (ஆ), (இ) களில் தேர்ச்சியடைவதற்குரிய புள்ளிகளின் நூற்றுவீதம் ஒவ்வொரு பாடத்திற்கும் 40 ம், மொத்தச் சராசரி 50 ம் ஆகும். (ஈ), (உ) ம் கேள்வித்தாள்களில் தேர்ச்சியடைவதற்கு 60 வீதம் புள்ளிகள் பெறல் வேண்டும்.

6. நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (ஈ) வரையுள்ள பாடங்களில் சித்தியெய்த வேண்டும். மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (இ) வரையுள்ள பாடங்களிலும் (உ) விலும் சித்தியெய்தல் வேண்டும்.

7. எழுத்துப் பரீட்சையில் சித்தி பெருத பரீட்சார்த்திகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைக்கப்படமாட்டார்கள்.

8. எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகட்கு செய்முறைப் பரீட்சைக்கான நேரமும் இடமும் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சை எழுத்துப் பரீட்சையின் நில அளவையினதும் மட்டமாக்கலினதும் பாடத்திட்டங்களுக்கமைய நடைபெறும்.

9. பரீட்சார்த்திகள், பரீட்சகர் குறிக்கும் நேரங்களுள் வெளிக்கள வேலைகள் செய்வதொடு சீரான நிலையில் உள்ள உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும். திருப்தியற்ற வேலைகட்குச் சீரற்ற உபகரணங்களை ஒரு காரணமாகக் கொள்ள முடியாது. பரீட்சை நேரத்தில் எவருடனுவது தொடர்பு கொள்ளக் காணப்படும் பரீட்சார்த்திகளின் தகைமை நீக்கப்படும்.

10. எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்கள் சொந்த உபகரணங்கள். கம்பங்கள், முனைகள், வரைதற் பலகைகள், வரைதற் பொருட்கள், எழுது கருவிவகை ஆகியனவற்றையும் தொழிலாளர்களையும் கொண்டு வருதல் வேண்டும். எழுத்துப் பரீட்சைக்கோ அல்லது செய்முறைப் பரீட்சைக்கோ எதுவிதத்திலும் உதவி அளிக்கப்படமாட்டாது.

11. 1969 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. (அ) சகல பரீட்சார்த்திகளும் எழுத்து, செய்முறை ஆகிய பரீட்சைகளில் ஒவ்வொரு பாடமும் பரீட்சிக்கப்படுவதற்கு முன்பு மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காகக் கீழ்கொடுக்கப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும் :—

(1) தபாற் கந்தோர்களின் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாள அட்டை,

(2) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்),

(3) இப்பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்குள் ஓர் அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாசனம்.

(ஆ) மேற் குறிக்கப்பட்ட (அ) வில் பந்தியில் குறிப்பிட்ட எந்த ஒரு சாசனம் மூலமாவது தமது அடையாளத்தை நிரூபிக்கத்தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் அவர் தோற்றும் எழுத்து, செய்முறை பரீட்சையில் ஒரு பாடத்திலாவது பரீட்சிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

13. இது சம்பந்தமான சகல தொடர்புகளும் நில அளவையாளர் நாயகத்துக்கே விலாசமிடப்பட வேண்டும்; எனக்குத் தனிப்பட்ட முறையில் அல்ல.

சி. ரீ. குணவர்தன,
பதில் நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கிளை, " சீ எஸ்/சீ ஈ. ",
கிருல வீதி,
த. பெ. எண். 506,
கொழும்பு 5.
1969 ம் ஆண்டு எப்பிரல் மீ 20 ந் உ.

5–191—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

## மொறட்டுவை கட்டுபெத்தை இலங்கைத் தொழினுட்ப வியற் கல்லூரியிற் சேர்தல்

### தொழினுட்பவியலர் பயிற்சி நெறி

மேற்குறிப்பிட்ட பயிற்சிக்கு விணணப்பங் கோரி 1969 ஆம் ஆண்டு எப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வெளிவந்த இல. 14,850 கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை பகுதி I தொகுதி (II) இல் உள்ள அறிவித்தல் சம்பந்தமாக **சிங்கள மொழி** அறிவித்தலில் பந்தி 2 (ஆ), படிவம் 1 இல் பந்தி 9 (ஆ) நிரல் 1 ஆகியன உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன.

பந்தி 2 (ஆ) பின்வருமாறு அமைதல் வேண்டும்.

**கல்வித் தேவைகள்:**

க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அந்த ஆறுபாடங்களுள் தூயகணிதம், பௌதிகம், மொழி ஆகியன அடங்கியிருப்பதுடன் இரண்டு விஞ்ஞான பாடங்கள் உட்பட மூன்று பாடங்களிலே திறமைத் தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

படிவம் 1 இல், பந்தி 9 (ஆ) நிரல் 1. " தூயகணிதம் " என அமைதல் வேண்டும்.

அதிபர்கள் விண்ணப்பங்களையும் அட்டவணைகளையும் 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புதல் வேண்டும்.

எல். எச். சுமணதாசா,
பணிப்பாளர்.

இலங்கைத் தொழினுட்பவியற் கல்லூரி,
கட்டுப்பெத்தை,
மொறட்டுவை.

5–33—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

## பரீட்சைப் பகுதி

### ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (விசேட பயிற்சிகள்) 1969

**1. பயிற்சிக் காலம்**

(i) பயிற்சிக்காலம் இரண்டு வருடங்களாகும். ஒரு பயிற்சியாளர் பயிற்சி பெறுங்காலத்தில் அவரது நடத்தை, கல்வியில் அக்கறை எடுத்தல் முதலிய விடயங்களில் கல்லூரி அதிபரைத் திருப்திப்படுத்தத் தவறினல் அவர் மேற்படி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார். இவ்விடயத்தில் மகா கல்வியதிபதியின் தீர்ப்பே முடிவானதாகும்.

(ii) பயிற்சிக் காலத்தில் வேறு வெளிப் பயிற்சிகள் பெறவோ அல்லது வெளிப் பரீட்சைகள் எடுக்கவோ ஒரு பயிற்சியாளர் அனுமதிக்கப்படமாட்டார். எனினும் அதிபரின் உசிதப்படி பயிற்சியாளர்கள் க. பொ. த. ப. (சாதாரண தரம்) பரீட்சையில் தமது இரண்டு வருடப் பயிற்சிக் காலத்தில் முதலாம் வருடத்தில் மூன்று பாடங்களுக்கு மேற்படாமலும் க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சையில் இரண்டு பாடங்களுக்கு மேற்படாமலும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம். பயிற்சிக் கலாசாலையில் எப்பாடங்களிற் பயிற்சி பெறுகிறர்களோ அப்பாடங்களுக்குத் தோற்றுவதற்கு மாத்திரம் அனுமதிக்கப்படுவர். இப்பரீட்சையில் எடுக்க வேண்டிய பாடங்களின் எண்ணிக்கையை அதிபரே தீர்மானிப்பார். இப்பரீட்சைக்குத் தோற்றுதல் அல்லது சித்தியடைதல் பின்னல் வரக்கூடிய பயிற்சித் திறமையையோ அல்லது சித்தியடைவதையோ தடைப்படுத்துவதாயிருக்கக் கூடாதெனப் பயிற்சி பெறுவோர் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். பயிற்சி பெறுங்காலத்தில் எத்தகைய காரணங்களைக் கொண்டும் பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**2. பயிற்சிக் கலாசாலையிற் சேர்தல்**

(i) பின்வரும் வகுப்பைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் இப்பயிற்சியில் சேரக்கூடாது. அவர்கள் இப்பரீட்சை எடுப்பதற்கு விண்ணப்பிக்கவுங் கூடாது. இத்தகைய பரீட்சார்த்தி ஒருவர் மேற்படி பயிற்சிக்குச் சேர்ந்தால் அவரின் பரீட்சைத் தன்மை பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும்பொழுதிலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது பயிற்சிக் காலத்திலோ அல்லது பயிற்சியின் பின்னரோ எந்த நேரத்திலும் நிராகரிக்கப்படும்.

(அ) பயிற்சிக் கலாசாலை ஒன்றில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகள்.

(ஆ) ஓர் அரசாங்க அல்லது உதவிபெறும் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களாயும் அவர்களுடைய பிணைப் பத்திரத்திற் குறிப்பிடப்பட்டுள்ள காலம் 8 வருடங்களாயின் அதில் 5 வருடங்களையாவது அல்லது குறிப்பிடப்பட்ட காலம் 5 வருடங்களாயின் அதில் 3 வருடங்களையாவது 1.1.1970 இலன்று கழிக்காதவர்களாயும் உள்ள பயிற்சியாளர்கள்.

(இ) பந்தி 4 (ஆ) பிரிவில் காணும் விசேட பயிற்சிகளில் ஒன்றிலாவது எப்போதாயினும் பயிற்சியடைந்த பரீட்சார்த்திகள்.

(ஈ) 7 ம் பந்தியில் கொடுபட்டுள்ள வெவ்வேறு வகுப்புகளுக்கும் விண்ணப்பிப்பதற்குரிய தகுதியை விண்ணப்பம் முடிவடையும் திகதியன்றோ அதற்கு முன்னரோ திருப்திப்படுத்தாதவர்கள்.

(ii) கல்லூரியிற் சேர்ந்து இரண்டு வாரங்களுள் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், எல்லாப் படிகளும் உட்பட இரண்டு வருடச் சம்பளத்துக்கும், இரண்டு வருடப் பயிற்சிக்கான செலவுகளுக்கும் சமமான பெறுமதியுள்ள ஒரு பிணைப் பத்திரத்தை முடித்துக் கொடுப்பதற்குத் தேவையான எல்லாப் பத்திரங்களையும் கலாசாலை அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அப்பிணைப் பத்திரத்தில் பின்வருவனவற்றுக்கு அவர் உறுதிமொழி அளித்தல் வேண்டும் :—

(அ) பயிற்சிக் காலத்தின்போது அரசியல் முயற்சிகளில் பங்குபற்றுவதில்லையெனவும் ;

(ஆ) எக்காரணத்தை முன்னிட்டும் பயிற்சி நெறியைக் கைவிடுவதில்லையெனவும் ;

(இ) பயிற்சி நெறியை முடித்ததன்மேல், மகா கல்வி அதிபதியினல் அவர் ஆசிரியராக நியமிக்கப்படும் பாடசாலைகளில் 8 வருட காலத்துக்கு ஓர் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கும் (தனிப்பட்ட பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் அதே முகாமையின் கீழுள்ள பாடசாலைகளில் அல்லது அரசாங்கப் பாடசாலைகளில் 8 வருட காலத்துக்கு அதேபோன்று சேவை செய்வதற்கு உடன்பட்டுக் கல்விப் பகுதியுடன் ஒரு பிணைப்பத்திரத்தை முடித்துக் கொடுத்தல் வேண்டும்).

(ஈ) குறிப்பிடப்பட்ட சேவைக் காலம் முடிந்து பிணையின் கடப்பாடுகள் முற்றுகத் தீர்க்கப்படும் வரையும் வேறு ஏதேனும் உத்தியோகத்துக்காக அல்லது மேலும் ஒரு கல்வி விடுதலைக் காலத்துக்காக விண்ணப்பதில்லையெனவும்.

**3. சம்பளம்**

திருப்திகரமாகப் பயிற்சியைப் பூரணப்படுத்தி ஆசிரியர்களாக நியமனங்களைப் பெறுபவர், பயிற்றப்பட்ட உயர்தர ஆசிரிய சம்பளத் திட்டத்திற்கு உரித்துடையர். இவர்கள் விசேட பயிற்சிபெற்ற பாடங்களை ஒரு வாரத்திற் குறைந்தது 10 மணித்தியாலங்களுக்காவது கற்பித்தல் வேண்டும்.

4. (அ) இப்பிரமாணங்கள் கல்வி அமைச்சுடன் கலந்து வகுக்கப்பட்டதாகும். இப்பரீட்சை மகா கல்வியதிபதியின் சார்பாக பரீட்சாதிகாரியால் நடாத்தப்படுகிறது.

(ஆ) மஹரகம, பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் கீழ்க்காணும் விசேட பயிற்சிகள் நடாத்தப்படும்.—

(1) ஆங்கிலம்,
(2) கணிதம்,
(3) விஞ்ஞானம்,
(4) கைப்பணி,
(5) வர்த்தகம்,
(6) மனையியல் (பெண்களுக்கு மாத்திரம்).

மேலே குறிப்பிடப்பட்ட பயிற்சிகளுள் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பயிற்சிகள் மஹரகம ஆசிரியர் கலாசாலையில் சிங்கள மொழிமூலமும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் தமிழ் மொழிமூலமும் அளிக்கப்படும். ஆங்கிலம் பயிற்சி மஹரகம, பலாலி என்னும் இரு ஆசிரியர் கலாசாலைகளிலும் ஆங்கில மொழிமூலம் அளிக்கப்படும்.

(இ) சிங்கள/தமிழ் மொழிமூலம் போதிக்கப்படும் பயிற்சிகளில் சேர்வதற்குக் குறைந்தது சிங்களப் பாஷை அல்லது தமிழ்ப் பாஷையுடன் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது சிங்கள பாஷை அல்லது தமிழ் பாஷையுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலப் பயிற்சியின் விஷயத்தில் ஆசிரியர்களுக்கு மாத்திரம் சிங்களப் பாஷை/தமிழ்ப்பாஷைக்குப் பதிலாக குறைந்ததர சிங்களம்/குறைந்ததர தமிழ் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஈ) தெரிவு செய்யும் ஒவ்வொரு பயிற்சிக்கும் தேவையான தகைமை நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தும் பரீட்சார்த்தி ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிகளுக்குத் தகுதியுடையவராயின், ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம். கைவினைப் பயிற்சிக்கு சேர்த்தற்குப் போதியளவு பரீட்சார்த்திகள் தேர்ச்சியடையாவிடின் இப்பயிற்சிக்கு கணித, விஞ்ஞான பயிற்சிகளுக்குத் தேர்ச்சியடைந்தவர்களிலிருந்து தெரிந்து அனுமதிக்கப்படுவர்.

**5. பரீட்சைத் தேதி :**

இப்பரீட்சை புதன்கிழமை 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ந் தேதி.

**6. பரீட்சை இடங்கள்**

(i) பின்வரும் இடங்களில் பரீட்சை நடைபெறும் :—

கொழும்பு, கம்பகா, களுத்துறை, நீர்கொழும்பு, நுகேகொடை, பாணந்துறை, பிலியந்தலை, அநுராதபுரம், மட்டக்களப்பு, கொடகாவெலை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, வதுளை,குருநாகல், சாவகச்சேரி, இளவாலை, யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, புத்தளம்.

(ii) பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பிய ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத இடங்கள் நீக்கப்படும்.

(iii) சாதாரணமாக பரீட்சார்த்தியால் முதன் முதல் தெரிவுசெய்யப்பட்ட இடத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. போதியளவு அறிவித்தல் கொடுபட்டால், தூரத்தேயுள்ள பாடசாலைக்கான மாற்றம் போன்ற கஷ்டமானதெனக் கருதப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் அவற்றின் தன்மைக்கேற்பச் சீர்தூக்கிக் கவனிக்கப்படும்.

**7. தகுதி**

**அ. பொது**

ஒரு பரீட்சார்த்தி—

(i) நன்னடத்தையுள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ii) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

(iii) கீழ்க்குறிக்கப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும் :—

(அ) ஆசிரியர்களுக்கு (8 ம் பிரமாணத்தைப் பார்க்கவும்) விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதுக்கு உட்பட்டவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆசிரியரல்லாதவர்களுக்கு விண்ணப்பம் முடிவடையும் திகதியிலன்று 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 32 வயதுக்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

(iv) பிரமாணம் 4 (இ) யைச் சிங்கள/தமிழ் மொழிகளுக்குரிய நிபந்தனைகளைத் திருப்திப்படுத்துபவராயிருத்தல் வேண்டும்.

(v) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது இலங்கை க. பொ. த. ப. (சாதாரண தர)ப் பரீட்சையில் 2 க்கு மேற்படாத தடவைகளில் சிங்கள/தமிழ் பாஷையும், எண்கணிதமும் அல்லது வர்த்தக எண்கணிதமும் அல்லது கணிதமும் உட்பட 6 பாடங்களிற் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலப் பயிற்சி நெறிக்கு எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் அல்லது கணிதத்தில் சித்தியடைந்திருக்க வேண்டுமென்பது அவசியமன்று.

### ஆ.—விசேட தகுதி

கவனிக்க.—(1952 டிசெம்பரில் க. பொ. த. ப. (சாதாரணதரம்) என்ற பாடப் பரீட்சை புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சி. பா. த. ப. பரீட்சையில் தனிப்பாடத்திற் பெற்ற சித்திகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா). பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

**(அ) ஆங்கிலப் பயிற்சி நெறிக்கு :—**

(i) ஆங்கிலப் பாஷையில் ஒரு திறமைச் சித்தியுடன் கூடிய சி. பா. த. ப. ஆங்கிலம்,

அல்லது

(ii) ஆங்கிலப்பாஷையிலும் ஆங்கில இலக்கியத்திலும் சித்திகளுடன் கூடிய சி. பா. த. ப. ஆங்கிலம்,

அல்லது

(iii) ஆங்கிலப்பாஷை பாடத்திட்டம் " அ " வில் திறமைச் சித்தி ;

அல்லது

(iv) ஆங்கிலப்பாஷை பாடத்திட்டம் " அ " விலும் ஆங்கில இலக்கியத்திலும் சதாரண சித்திகள் ;

அல்லது

(v) ஆங்கிலப்பாஷை பாடத்திட்டம் " ஆ " வில் திறமைச் சித்தியும் ஆங்கில இலக்கியத்தில் ஒரு சாதாரண சித்தியும் ;

அல்லது

(vi) க பொ. த. ப. (உயர் தர) ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் ஒரு சித்தி ;

அல்லது

(vii) ஆங்கில மொழிமூலம் க. பொ. த. ப. (உயர் தர)ப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான ஒரு பரீட்சையில், விஞ்ஞான கணித பாடங்களும் லத்தீன் அல்லாத வேறு பாஷைகளும் தவிர்ந்த எவையேனும் வேறு இரண்டு பாடங்களிற் பெற்ற சித்திகள்.

**(ஆ) கணிதப் பயிற்சி நெறிக்கு :—**

(i) சி. பா. த. ப அல்லது க. பொ. த. ப. (சாதாரண தர)ப் பரீட்சையில்

(அ) தூயகணிதம், பிரயோககணிதம், உயர்கணிதம் என்பவற்றில் இரண்டு ;

அல்லது

(ஆ) பௌதிகவியலில் அல்லது இரசாயனவியலில் பெற்ற ஒரு சித்தியுடன் மேற்கூறிய 3 பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தியும் ;

அல்லது

ii) க. பொ. த.ப. (உயர் தர)ப் பரீட்சையில் தூய கணிதத்தில் அல்லது பிரயோக கணிதத்தில் பெற்ற ஒரு சித்தி.

**(இ) விஞ்ஞானப் பயிற்சி நெறிக்கு.—**

(i) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரண தர)ப் பரீட்சையில்

(அ) தூய கணிதமும், பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் (தாவரவியலோடும் விலங்கியலோடும் சேர்த்து உயிரியல் ஒரு பாடமாக எண்ணப்படாதவிடத்து) உயிரியல் என்பவற்றில் மூன்று பாடங்களும். இவற்றில் ஒன்றுவது திறமைச் சித்தியாக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) பௌதிகவியலில் அல்லது இரசாயனவியலில் க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சையிற் பெற்ற சித்தி.

**(ஈ) கைப்பணிப் பயிற்சி நெறிக்கு :—**

ஆண்களுக்கு—

சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரண தர)ப் பரீட்சையில் பின்வரும் மூன்றில் எவையேனும் இரண்டு :

(அ) மரவேலையில் திறமைச் சித்தி ;

(ஆ) உலோக வேலையில் திறமைச் சித்தி ;

(இ) கேத்திர கணிதப் பொறிமுறை வரைதலில் சித்தி.

பெண்களுக்கு—

பின்வரும் மூன்றில் எவையேனும் இரண்டு :—

(அ) நெசவுத் தொழிலில் திறமைச் சித்தி ;

(ஆ) வனைதல் தொழிலில் திறமைச் சித்தி ;

(இ) கேத்திர கணிதப் பொறிமுறை வரைதலில் அல்லது சித்திரத்தில் சித்தி.

**கவனிக்க.**—க. பொ. த. ப. (சாதாரண தர)ப் பரீசையில் கைப்பணிகளில் ஒரு திறமைச் சித்திக்குப் பதிலாக, தேவையான கைப்பணிகள் ஒன்றில் மூன்று வருடப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்ததன்மேல் அரசாங்க நுண்கலைக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தராதரப் பத்திரம் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிக் கைத்தொழில் ஆசிரியர் தராதரப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும், இத்தராதரப் பத்திரங்கள் பொதுத் தேவைகள் பற்றிக் கூறுகின்ற பந்தி 7 (v) இற் குறிக்கப்பட்டுள்ள ஆறுபாடங்களைப் அல்லது சி. பா. த. ப. தைப் பூர்த்தி செய்யும் நோக்கங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**கவனிக்க II**—இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட அல்லது கல்வி அமைச்சின் கீழுள்ள கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலைகளின் தொழிற் தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்கள் மேற்படி பிரமாணங்களின்படி தேவையான கேத்திர கணிதப் பொறிமுறை வரைதல், மரவேலை அல்லது உலோக வேலை, நெசவுத் தொழில் அல்லது வனைதல் தொழில் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படுவர். ஆனால், அத் தொழிற் தராதரப் பத்திரத்தில் இப் பாடங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாற்றான் அங்ஙனம் விலக்களிக்கப்படும்.

**(உ) வர்த்தகப் பயிற்சி நெறிக்கு :—**

பின்வருந் தேவைகளைத் திருப்தி செய்தல் வேண்டும் :

(i) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில்—

(அ) பின்வரும் பாடங்களுள் இரண்டில் திறமைச் சித்திகள்—

(அ) வர்த்தக எண்கணிதம், கணக்கியல், வர்த்தக மூலாதாரங்கள் :

(ஆ) கணக்கியலில் சித்தி ;

(இ) பின்வரும் பாடங்களுள் இரண்டில் சித்திகள் :—

வர்த்தக மூலாதாரங்கள், பொருளியல், வர்த்தக எண்கணிதம் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஒரு பாடமாகக் கருதப்படும்), அல்லது

(ii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்குப் பதிவாளர்களுக்கான வர்த்தக தராதரப் பத்திரம் அல்லது லண்டன் வர்த்தக மன்றத்தின் வர்த்தக தராதரப் பத்திரம் (உயர்தரம் அல்லது கீழ்த்தரம்), அல்லது

(iii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்களுக்கான வர்த்தக தராதரப் பத்திரமும், அல்லது லண்டன் வர்த்தக மன்றத்தின் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் தராதரப் பத்திரமும் (உயர்தரம் அல்லது கீழ்த்தரம்), அத்துடன் க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு திறமைச் சித்தியும் அல்லது உ. பா. த. ப/க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு சித்தியும் :

அல்லது

(iv) பரீட்சைப் பகுதியால் நடத்தப்பட்ட வர்த்தக தராதரப் பத்திரத்தின் கணக்குப் பதிவாளர்களின் பிரிவுடன் அல்லது வர்த்தக தராதரப் பத்திரத்தின் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவுடன் க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு திறமைச் சித்தியும் அல்லது உ. பா. த. ப/க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சையில் கணக்கியலில் ஒரு சித்தியும் ; அல்லது

(இ) கணக்கியல், வர்த்தகமும் நிதியும் என்பவற்றுடன் கூடிய உ. பா. த. ப/க. பொ. த. ப. (உயர்தரம்) வும் அத்துடன் க. பொ. த.ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் வர்த்தக எண்கணிதத்தில் அல்லது பொருளியலில் அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தில் (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஒரு பாடமாகக் கருதப்படும்.) பெற்ற ஒரு சித்தியும்.

**(ஈ) மனையியற் பயிற்சி நெறிக்கு—**

(i) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில்—

(அ) மனையியலில் அல்லது மனைப்பணியில் திறமைச் சித்தி ;

(ஆ) தையல் வேலையில் அல்லது வீட்டுப்பணியில் திறமைச் சித்தி ;

(இ) பின்வருவனவற்றுள் ஒன்றில் சித்தி :

உடனலவியலும் உடற்றெழிலியலும் அல்லது சுகாதாரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் ; அல்லது

(ii) பின்வருவனவற்றில் ஒன்று.—

(அ) சிரேஷ்ட மனையியல் தராதரப் பத்திரம்,

(ஆ) இந்நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்வி நிலையத்திலிருந்து சி. பா. த. ப. வின் பின் அப்பாடத்தில் இரண்டு வருட முழு நேரக் கல்வியின் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மனையியல் சிரேஷ்ட தராதரப் பத்திரம்.

(இ) ஓர் இரண்டு வருடப் பயிற்சியின் பின்னர் பெறப்பட்ட குண்டசாலை மகளிர் விவசாயப் பாடசாலையின் கிராம மனைநிர்வாகத் தராதரப் பத்திரம்.

8. பிரமாணம் 7 அ (iii) (அ) வின் நோக்கங்களுக்காக—

இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குரிய கடைசித் தேதியிலன்று அரசாங்க அல்லது கல்வியதிபதியின் முகாமையின் கீழுள்ள ஒரு பாடசாலையில் தகுதிவாய்ந்த ஆசிரியராகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியர்களாகக் கருதப்படுவர். அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை ஒன்றில் நிரந்தர ஆசிரியர்களாயிருந்து, சாதாரண வகுப்பில் 20 மணித்தியால வேலை செய்யும் ஆசிரியர்களும் ஆசிரியர்களாகக் கருதப்படுவர். இந்நோக்கத்துக்குப் பின்வருவன அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலைகளாகக் கருதப்படும்.

(அ) 1951 இல் கட்டணம் அறவிடும் பாடசாலைகளான உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ;

(ஆ) 1.12.1960 இலன்று கட்டணம் அறவிடாத தனிப்பட்ட பாடசாலைகளான I ஆந்தர II ஆந்தரப் பாடசாலைகள். இவ்வகையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சையின்போது, பயிற்சிக் காலத்தில் முகாமையாளரினால் அவர்களுக்கு ஒரு சம்பளம் அல்லது ஒரு படி வழங்கப்படும் எனவும், பயிற்சியின் பின்னர் அவர்கள் அதே முகாமையாளரின் கீழ்த் திரும்பவும் வேலைக்கமர்த்தப்படுவர் எனவும் பொருள்படும் பத்திரச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. பரீட்சைத் திட்டம்

(அ) இப்பரீட்சை, எழுத்துப் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையையும் கொண்டுள்ளது. எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு மகா கல்வியதிபதியால் அழைக்கப்படுவர்.

ஆங்கிலப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் பொது விவேக வினாத்தாளுக்கு ஆங்கிலத்தில் தோற்றுதல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சை பின்வருமாறு :—

(i) பொது விவேகம் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)—½ மணித்தியாலங் கொண்டது. 100 புள்ளிகள். எல்லாப் பரீட்சார்த்திகட்கும்.

(ii) ஆங்கிலப் பாஷையும் வியாசமும்—ஒவ்வொன்றும் 1½ மணித்தியாலங்கள் கொண்ட இரண்டு வினாத்தாள்கள். 200 புள்ளிகள். ஆங்கிலப் பயிற்சிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

(iii) கணிதம் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)—ஒவ்வொன்றும் 2 மணித்தியாலங்கள் கொண்ட இரு வினாப்பத்திரங்கள். 200 புள்ளிகள். கணிதப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

(iv) விஞ்ஞானம் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)—இரண்டு வினாப்பத்திரம், 3 மணித்தியாலங்கள் கொண்டது. 200 புள்ளிகள். விஞ்ஞானப் பயிற்சிக்கு அல்லது விவசாயப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

(v) வர்த்தகம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)—இரண்டு வினாப்பத்திரம். 3 மணித்தியாலங்கள் கொண்டது. 200 புள்ளிகள். வர்த்தகப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

(vi) கைப்பணி அ. (ஆண்களுக்கு) ஆ. கைப்பணி (பெண்களுக்கு)—(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)—3 மணித்தியாலங்கள். 200 புள்ளிகள். கைப்பணிப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

(vii) மனையியலும் தையல் வேலையும் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)—3 மணித்தியாலங்கள். 200 புள்ளிகள். மனையியற் பயிற்சிக்குத் தோற்றுவோருக்கு.

(ஆ) ஆங்கிலப் பாஷை, தூய கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், கணக்குப் பதிவியல், ஆரம்ப வர்த்தகம் என்பனவற்றின் பாடத்திட்டங்கள் க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையின் பாடத் திட்டத்தினை ஒத்ததாயிருக்கும். ஆனல் வினாக்கள் கூடிய தரத்தைக் கொண்டனவாய் இருக்கும்.

(i) ஆங்கில பாஷையிலும் வியாசத்திலும் பாடப்புத்தகங்கள் இல்லை. வினாப்பத்திரம் I, ஆங்கில வியாசமும் சுருக்கி எழுதலும்—1½ மணித்தியாலங்கள். வினாப்பத்திரம் II , ஆங்கிலப் பாஷை—1½ மணித்தியாலங்கள்.

(ii) கணிதம்—வினாப்பத்திரம் I, அட்சரகணிதத்திலும், திரிகோணகணிதத்திலும் வினாக்களைக் கொண்டதாய் இருக்கும். வினாப்பத்திரம் II, கேத்திர கணிதத்தில் வினாக்களைக் கொண்டதாய் இருக்கும்.

(iii) விஞ்ஞானம்—இவ்வினாப்பத்திரம் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் முதலியவற்றைக் கொண்டதாக ஒரே வேளையில் பெறக்கூடியதாக இருக்கும். ஆனல், தகுதியுள்ள தரத்தைக் கொண்ட பரீட்சார்த்திகள், கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கக்கூடியதாய் வினாப்பத்திரம் வகுக்கப்படும்.

(iv) வர்த்தக வினாப்பத்திரம்—கணக்குப் பதிவியலிலும், ஆரம்ப வர்த்தகத்திலும் வினாக்களைக் கொண்டதாக ஒரே வேளையில் பெறக்கூடியதாக இருக்கும். இப்பாடங்களில் ஒன்றினைப் படித்த ஒரு பரீட்சார்த்தி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியதாய் வினாக்கள் அமையும்.

(v) கைப்பணி அ. வினாத்தாளில் உலோக வேலை, மரவேலையைப் பற்றிய வினாக்கள் இருக்கும். இவற்றுள் ஒன்றைப் படித்த பரீட்சார்த்தி தேவையான வினாக்களைத் தெரிந்தெடுக்கக்கூடியவாறு வினாக்கள் அமையும்.

(vi) மனையியல், தையல்வேலை வினாப்பத்திரம்—சமையல், போஷணை, புடவைகளும் ஆடைவகைகளும், தையல்வேலை, குடித்தன நிர்வாகம், சலவைத்தொழில், தாய்மையியல்.

(இ) ஒரு பாடத்தின் எதிரே எம்மொழிகள் குறிக்கப்பட்டிருக்கின்றனவோ அம்மொழிகள் மூலத்தில் வினாப்பத்திரங்கள் தயார் செய்யப்படும். ஆங்கிலப் பயிற்சிக்குப் பொதுவிவேக வினாத்தாளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளைத் தவிர்ந்த ஏனைய பரீட்சார்த்திகள் எப்பாடத்திற்கும் தான் விரும்பிய மொழிமூலம் விடையளிக்க அனுமதிக்கப்படுவர்.

10. பரீட்சைக்கு அனுமதித்தல்

(i) இப்பிரமாணங்களின் பிரகாரம், தேவையான கட்டணத்துடன் விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

(ii) இப்பிரமாணங்களின்படி தகுதியுடையவர்கள் என்று விண்ணப்பம் அனுப்பும் பரீட்சார்த்திகளெல்லோரும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். ஆனல் அவ்வாறு அனுமதிக்கப்பட்டமை அவர் அப்பரீட்சைக்குத் தகுதியுடையவரென்பதைக் குறிக்காது. ஒரு பரீட்சார்த்தி இப்பிரமாணங்களின்படி தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அவர் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின்போதோ, பரீட்சையின் பின்னரோ, நேர்முகப் பரீட்சையின்போதோ, பயிற்சிபெறும் காலத்திலோ, பயிற்சிபெற்ற பின்னரோ நிராகரிக்கப்படலாம். அத்தகைய பரீட்சார்த்தியினது பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் பயனற்றதாக்கப்படுவதுடன் அவர் நேர்மையீனமாக நடந்துகொண்டதாகக் கண்டால் கற்பித்தற் றெழிலுக்காய எப்பரீட்சையையும் சீவியகாலவரை எடுக்கமுடியாதபடி தடுத்து வைக்கப்படுவர்.

11. பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

(i) இதில் பிரசுரிக்கப்பட்டுள்ள இப்பரீட்சைக்குரிய சிங்கள அல்லது தமிழ் மாதிரிப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு விண்ணப்பப் பத்திரத்தைத் தாமே ஆக்கி, நிரப்பி அனுப்புதல் வேண்டும். சிங்கள மொழியில் பயிற்சிபெறும் பரீட்சார்த்திகள் விண்ணப்பப் பத்திரத்தை சிங்கள மொழியிலும் தமிழ் மொழியில் பயிற்சிபெறும் பரீட்சார்த்திகள் விண்ணப்பப் பத்திரத்தைத் தமிழ் மொழியிலும் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும். **இப்பகுதியால் அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.**

(ii) விண்ணப்பப் பத்திரத்தை ஆக்கும்பொழுது பின்வருவனவற்றைக் கவனமாகவும், கட்டாயமாகவும் அனுசரித்தல் வேண்டும். இவற்றுள் எவையேனும் திருத்தமாகக் கொள்ளப்படாவிட்டால் விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

(அ) ஏறத்தாழ 8″ × 13″ அளவுகளைக் கொண்ட பாதிப் " புல்ஸ்காப் " தாளில் விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரித்தல் வேண்டும். வேறு தாள்களைப் பயன்படுத்தக் கூடாது.

(ஆ) தட்டச்சில் இப்பத்திரத்தை ஆக்கலாம். இப்பத்திரத்தைக் கைப்படச் செய்தால் கோடுகள் யாவும் சிவப்பு மையினுல் கீறிடப்படல் வேண்டும். கூடுகள் யாவும் நீலம் அல்லது கறுத்த மையினுல் நிரப்பப்படல் வேண்டும்.

(இ) கூடுகள் யாவும் சரியான ஒழுங்கு முறைப்படியும், உரிய பக்கப்படியும் கோடிடப்படல் வேண்டும். கூடுகளின் ஒழுங்கு முறையை மாற்றுதல் கூடாது. கூடுகள் தவருக விடப்படுதலும் கூடாது. சொற்கள் ஒன்றுக்குள் ஒன்று செருகாமலும், நெருக்கமாகாமலும், இருக்கக்கூடியவாறு இடம் பொருந்திய கூடுகளைக் கவனமாக ஆக்குதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப் பத்திரம் பூரணமாகவும், திருத்தமாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பம் அதன் தன்மைகளுக்கேற்ப பரிசீலனை செய்யப்பட்டு பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்படலாம் ; அல்லது பரீட்சார்த்தியின் தகைமையைக் பரீட்சைக்குப் பின்னர் நீக்கப்படலாம். பின்வருவனவற்றைப் பரீட்சார்த்திகள் அவதானித்தல் வேண்டும் :—

(அ) பதிவுசெய்யப்பட்ட ஆசிரியர் பதிவுசெய்த அதே பெயர்களைத் தருதல் வேண்டும். ஏனையோர், அவர்களின் நன்மையைப் பொறுத்தவரையில், தமது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உள்ளவாறு பெயர்களைத் தருதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் ஆசிரியரா மாணவரா அல்லது ஆசிரியரல்லாதவரா என்று குறிப்பிடுதல் வேண்டும். ஆசிரியரும் மாணவ ஆசிரியரும் தமது நியமனத் திகதிகளைக் குறிப்பிடவேண்டும்.

(இ) பரீட்சார்த்தியின் கையொப்பம் தக்க பின்வரும் ஒருவரால் அத்தாட்சி செய்யப்படுதல் வேண்டும் ; சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர், நொத்தாரிசு, அனுமதிக்கப்பட்ட ஒரு பாடசாலை அதிபர், தரைப்படை, கடற் படை, விமானப் படைகளினுள்ள ஆணையிடப்பட்ட உத்தியோ கத்தர், அரசாங்க சேவையில் 2,400 ரூபாவுக்குக் குறை வில்லாத வருடச் சம்பளம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர் புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள குருமார் மதிப்பிற் குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ஈ) அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் களின் விண்ணப்பங்கள் அவர்களது தலைமை ஆசிரியர் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(iv) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கடித மூலம் செவ்வாய்க்கிழமை 1969 ம் ஆண்டு யூன் மாதம் 10 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பதாக பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, கொழும்பு 2, என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப் பத்தை உள்ளடக்கியுள்ள தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் பரீட்சையின் பெயரும் விண்ணப்பித்த ஸ்தானமும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(vi) விண்ணப்பங்களுடன் வேறு எவ்வித உறுதிப் பத்திரங்களும் அனுப்புதல் கூடாது.

**12. பிரவேசக் கட்டணம்**

பிரவேசக் கட்டணம் ரூபா 20. இக்கட்டணம் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சார்த்தி பிரவேச விண்ணப்பப் பத்திரத்தில் இவற்றை ஒட்டி இவற்றின்மேல் கையொப்பத்தை இட்டு பயனற்றதாக்கவேண்டும். பயனற்றதாக்காமல் அனுப்பப்படும் முத்திரை களுக்கு இக்கந்தோர் பொறுப்பு ஏற்காது.

**13. பிரவேச விண்ணப்பங்களை நிராகரித்தல்**

(i) பின்வரும் பிரவேச விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ; பரீட்சார்த்திகளும் அறிவிக்கப்படுவர் :

(அ) பூர்த்தியற்றதாகவோ, குறைபாடாகவோ, இப்பிரமாணங்களுக்கு அமையாததாகவோ உள்ளவை.

(ஆ) உரிய பிரவேசக் கட்டணப்பணம் இல்லாது இருப்பவை.

(இ) முடிவுத் தேதிக்குப் பின்னர் இக்கந்தோரில் கிடைப்பவை, பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சைத் தன்மை நீக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால், அல்லது பரீட்சைத் தன்மை நீக்கப்பட்டால் பிரவேசக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**14. கட்டணப் பணம்**

சுகவீனம் காரணமாகவோ அல்லது வேறு எவ்வித காரணத்தையும் முன்னிட்டு பரீட்சைக்கு செலுத்திய முழுக்கட்டுப்பணமோ அதன் பகுதியோ திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**15. பிரவேசப் பத்திரங்கள்**

(i) விண்ணப்பம் நிராகரிக்கப்படாத ஒரு பரீட்சார்த்தி பரீட்சைத் தினத் திற்கு முன் ஏழு நாட்களுக்குள் தமது பிரவேசச்சீட்டைப் பெறுவர். தபாலில் பிரவேசச் சீட்டுகள் அனுப்பியமைப் பற்றிய அறிவித்தல் தினசரிப் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

(ii) அறிவிப்பைப் பார்த்துத் தம் பிரவேசச் சீட்டைப் பெருத பரீட்சார்த்திகள் உடனே பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 (" Exams " Colombo) என்ற விலாசத்துக்கு தந்திமூலமோ அல்லது நேர்முகதாவிலோ தொடர்பு கொள்ளவேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும்பொழுது மேல்வரும் விபரங்களைக் குறிப்பிட வேண்டும்.

(அ) பரீட்சார்த்தியின் பெயர் :

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :

(இ) பரீட்சார்த்தியினது தபால் விலாசம் :

(ஈ) பரீட்சைக்குத் தோற்றக் கோரிய பரீட்சை ஸ்தானம் :

(உ) விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய தேதி, அதனைப் பதிவு செய்த தபாற் கந்தோர், பதிவிலக்கம் :

**16. அடையாளப் பத்திரங்கள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் தோற்றும்போது பரீட்சை மண்டபத்தில் உள்ள அதிகாரியைத் திருப்திப் படுத்தத்தக்கதாக தாம் இன்னாரென்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களுள் ஒன்று அங்கீகரிக்கப்படும்.

(அ) தபாற் பகுதித் தலைவர் அளிக்கும் அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை நிகழும் தேதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் அளிக்கப்பட்டதும் உறுதியுள்ளதுமான வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச்சீட்டு ;

(இ) பரீட்சை நிகழும் தேதிக்கு மூன்று வருடங்களுக்குள் அரசாங்கப் பகுதியொன்றின் அதிகாரத்தால் அல்லது சட்டப்படியுள்ள ஸ்தா பனத்தால் அளிக்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் புகைப் படத்தைக் கொண்டதுமான பத்திரம், உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்திரம்.

(ஈ) பாஸ்போட் அளவினதான ஒரு புகைப்படம். பிரவேசப் பத்திரத் தில் பரீட்சார்த்தியின் அடையாளம் பற்றி உறுதிப்படுத்தும் தகைமையுள்ளவர் இப்புகைப்படத்தின் பின்புறத்தில் பின்வரு மாறு உறுதிப்படுத்தல் வேண்டும்.

" இதில் கையொப்பமிடட் பரீட்சார்த்தி ————————இன் படமே
(முழுப்பெயர்களும்)

இப்புகைப்படமென்பதை அத்தாட்சிப்படுத்துகிறேன்."

————————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

————————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயரும் பதவியும் : ————————.

திகதி : ————.

மேற்கூறப்பட்ட எவையேனும் ஓர் அடையாளச் சீட்டைக் கொண்டு வராத பரீட்சார்த்தியின் பரீட்சைத் தகைமை தற்காலிகமானது. அத் தகைமை பரீட்சாதிகாரியின் விரகின்படி நீக்கப்படலாம்.

**17. உறுதிப்பத்திரங்கள்**

(i) பின்வருவனவற்றின் சில அல்லது யாவும் தேவைப்படுவன வாகும் :—

(அ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்தமைக்கான அத்தாட்சிப் பத்திரம், அல்லது அதை நிரூபித்தற்காய உத்தியோகபூர்வ மான மூல அத்தாட்சிக் கடிதம் (தன்மைக்கேற்ப) ;

(ஆ) இலங்கைச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம். (இது பெருத மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் பெறுபேற் றிதழையும், பாடசாலைப் பரீட்சார்த்தியின் ஆசிரியரின் உறுதிக் கூற்றறிக்கையையும் இணைத்தல் வேண்டும்). உறுதிக் கூற்றறிக் கையில் பின்வருவன கொடுக்கப்படல் வேண்டும். எல்லா முழுப் பெயர்களும் பரீட்சையும், வருடமும், மாதமும் சுட்டிலக் கமும், பாடங்களும் அவற்றின் தரங்களும் ;

(இ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணதரம்) இப்பத்திரம் பெருதவர்கள் மேலே (ஆ) வில் கூறியபடி அத்தாட்சி உறுதிப்பத்திரம் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) பிறப்புச்சாட்சிப் பத்திரம். அல்லது விசேட வயதுப் பத்திரம் பாட சாலைகளிற் சேர்வதற்கான விசேட பிறப்புச் சாட்சிப் பத்திரமோ, ஞானஸ்நானப் பத்திரமோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பிறப்புச் சாட்சிப் பத்திரத்திற்குப் பதிலாக சத்தியக் கடதாசிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(உ) பெயரில் மாற்றங்கள் இருந்தால் இதற்குச் சாதகமாக சத்தியக் கடதாசி பெற்றோரில் ஒருவரால் செய்யப்படல் வேண்டும். பெற் ரோர் இல்லையெனின் 21 வயதுக்கு மேற்பட்ட கிட்டிய சொந்தக் காரரில் ஒருவரால் இது செய்யப்படல் வேண்டும். பிறப்புச் சாட்சிப் பத்திரத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது என அதில் எழுதப்படல் வேண்டும். சத்தியக் கடதாசி யில் இறைவரி முத்திரை ஒட்டத் தேவையில்லை.

(ஊ) கல்வி ஸ்தாபன ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களிடமும், தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் தோட்ட அத்தியட்சகரிடமும் பெற்றுக் கொண்ட அத்தாட்சிப் பத்திரங்கள் 8 ஆம், 9 ஆம் பரீட்சை விதிகளின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகுதிகளை உறுதிப்படுத்துவனவாய் இருத்தல் வேண்டும். பாட சாலையின் பெயர், விலாசம், உறுதிப்படுத்தப்படுபவரது பதவி முதலியனவும் அத்தாட்சிப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) பரீட்சை விதிகளின் (8) (ஈ) யின் சார்பாக பரீட்சார்த்திக்கு வழங் கப்பட்ட சித்தியெய்தியோர் அட்டவணை அல்லது அதிகார பூர்வ மான விளம்பரம், அவ்வித உறுதிப்பத்திரம் பரீட்சார்த்திகளிட மில்லாவிட்டால் பரீட்சையின் விபரத்தைக் காட்டி பரீட்சாதிகாரிக் கெழுதினல், அதிகார பூர்வமான உறுதிக் கூற்றறிக்கை யொன்று நேர்முகப் பரீட்சகர் குழுவுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும். எந்த ஆசிரியர் கலாசாலையில் நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக்கிறது என்பதைப் பரீட்சார்த்தி அறிவித்தல் வேண் டும். உறுதிக் கூற்றறிக்கை பரீட்சார்த்திக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படமாட்டாது.

(எ) நல்ல அந்தஸ்திலுள்ள இருவரிடமிருந்து பெறக்கூடிய நன்னடத்தைப் பத்திரங்கள். இப்பத்திரங்கள் பரீட்சார்த்தியை 5 வருடங்களுக்குக் குறையாமல் அவரை நேர்முகதாவில் தெரிந்த இரு வரிடமிருந்து அண்மையில் பெறப்பட்டனவாய் இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி வசிக்கும் நகரத்தின் அல்லது கிராமத்தில் உள்ள பாடசாலையின் தலைமை ஆசிரியர்கள் அல்லது வேறு உத்தியோகத்தர் என்பவர்களிடமிருந்து பெறும் நற்சாட்சிப் பத்திரங்கள் விசேடமானவையாகும்.

(ii) உறுதிப் பத்திரங்களோ அவற்றின் பிரதிகளோ விண்ணப்பத்துடன் அனுப்பப்படக்கூடாது. பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது அவற்றை நேர்முகப் பரீட்சைக் குழுவினரது பரிசோதனைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். தேவையானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான உறுதிப் பத்திரங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பதன் மூலம் தமது தகுதியை நிரூபிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

(iii) அறிவுறுத்தல்களைக் கவனியாது விண்ணப்பப் பத்திரத்துடன் சேர்ந்து அனுப்பப்படும் ஒரு பரீட்சார்த்தியினது தராதரப் பத்திரங்கள் தவறிப்போனால் இக்காரியாலயம் அதற்குப் பொறுப்பேற்காது.

(iv) ஒரு பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்படும் உறுதிப் பத்திரங்கட்கு அப்பரீட்சார்த்தியே பொறுப்பாளியாவர். மாற்றம் செய்யப்பட்ட அல்லது கள்ளத்தனமான அல்லது பொய்யான விபரங்களடங்கிய தராதரப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் தண்டனைக் குரியவராவர். அவர்கள் பரீட்சையினின்றும் விலக்கப்படுவதுடன், கற்பித்தல் தொழிலுக்காய எப்பரீட்சையினையும் சீவியகாலம் வரை எடுக்க முடியாதவாறு தடுத்தும் வைக்கப்படுவர்.

**18. பெறுபேறுகள்**

பரீட்சையின் (எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்ற இரு பிரிவின்) பெறுபேறுகளிலிருந்து பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அவ்விபரம் தனித்தனியாக அறிவிக்கப்படும். உடல், மனமாகியவை சம்பந்தமான குறைபாடுடையோர் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார். சித்தியெய்தியோர் நாமாவலிகள் பிரசுரிக்கப்படா ; விபரமான அறிக்கைகளும் கொடுக்கப்படா. இவை பற்றிய கடிதத் தொடர்புகளை இப்பகுதியுடன் வைத்துக் கொள்ளக் கூடாது.

**19. வேறு குறிப்புகள்**

இப்பிரமாணங்களிற் குறிப்பிடப்படாதவை எவையேனுமிருப்பின் மகா கல்வியதிபதியுடன் கலந்தாலோசிப்பதற்கிணங்க, பரீட்சாதிகாரியினது உசிதப்படி தீர்மானிக்கப்படும்.

கே. ரீ. டபிள்யு. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 26 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### இலங்கைப் பரீட்சைப் பகுதி

**ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (விசேட பயிற்சி)—1969**

சுட்டிலக்கம் : ————————
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (அ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ————.
(ஆ) எல்லா முழுப் பெயர்களும் : ————.

2. தெரிந்தெடுத்த பரீட்சை இடம் :
முதலாவது தெரிவு : ————.
இரண்டாவது தெரிவு : ————.

3. (i) பிறந்த திகதி : ————. (ii) பிறந்த இடம் : ————.

4. இனம் : ————.

5. ஆணாயின் " ஆ " எனவும் பெண்ணாயின் " பெ " எனவும் பெரி எழுத்தில் எழுதுக : ————.

ஆசிரியரா, மாணவ ஆசிரியரா, ஆசிரியரல்லாதவரா எனக் குறிப்பிடுக : ————.

6. (அ) நிரந்தர முகவரி : ————.
(ஆ) தற்பொழுது ஆசிரியராயின் பாடசாலை முகவரி : ————.

7. விருப்ப ஒழுங்கின்படி தெரிந்தெடுத்த பயிற்சிகள் :

(i) ————.
(ii) ————.
(iii) ————.

8. இப்பயிற்சிகளுக்கு தோற்றுவதற்கு உம்மிடமுள்ள கல்வித் தகைமைகள் : ————.

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைப் பெறுபேறு
வருடம் : ————. மாதம் : ————. சுட்டிலக்கம் : ————. )

| பாடங்கள் | சாதாரணம் | திறமை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறு :

வருடம் :————. மாதம் : ————. சுட்டிலக்கம் :————

| பாடங்கள் | சாதாரணம் | திறமை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |

வருடம் : ————. மாதம் : ————சுட்டிலக்கம்: ————.

| பாடங்கள் | சாதாரணம் | திறமை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |

(இ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சைப் பெறுபேறுகள் :

| | வருடம் | மாதம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(ஈ) இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானப் பிரசுரத்தின்படி ஏனைய பரீட்சைகள் மூலம் நீர் தகுதியடைந்திருப்பின் அப் பரீட்சைகளின் பெறுபேறுகள் :

| | பரீட்சையின் பெயர் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | தராதரப் பத்திரத்தின் தரமும் திகதியும் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |

9. (அ) இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானிப் பிரசுரத்தின்படி எனக்குப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி இருக்கிறது எனவும்,

(ஆ) இவ்விண்ணப்பத்தில் என்னாற் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் நான் அறிந்தவரையிலும் எனது நம்பிக்கையின்படியும் உண்மையானவையெனவும்,

(இ) இங்கே ஒட்டப்பட்டிருக்கும் முத்திரைகள் முன்னர் பயன்படுத்தப்படாத தூய்மையான முத்திரைகள் என்றும் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமான பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகளுக்கான விதிகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்க உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

10. முத்திரை ஒட்டும் கூடு :

**கவனிக்க** : இங்கே 20 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி பரீட்சார்த்தி தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அவற்றைப் பயனற்றதாக்கல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன் மேல் ஒன்றாக ஒட்டுதலாகாது.

11. பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப் படிவத்திற் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சார்த்தியை எனக்கு நன்கு தெரியுமென்றும், அவர் இன்று எனது முன்னிலையிற் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் உறுதி கூறுகிறேன்.

————————,
உறுதிப்படுத்துபவர் கையொப்பம்.

————————,
பரீட்சார்த்தியின் கையொப்பம். திகதி :————————.

உறுதிப்படுத்தியவர் பெயர் :————————.
(விளக்கமாக)

தகுதி : ————————.

முகவரி : ————————.

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக்கொள்ளப் படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளை தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளவேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றைய பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுககப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்பட்டவோ கசகப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமையவேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல்,

பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக்கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு,

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபித்தற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக் கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாக கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள் கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானல், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களை கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணுமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

5–142—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா—மின்னேரிய உபபிரிவு

மின்னேரிய உபபிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைக்கு 1969 ஜூன் மாதம் 2 ம் திகதி காலை பத்து மணிவரை பொலநறுவையிலுள்ள வடகீழ் மாகாணத்துப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும் :—

| கேள்விப்பத்திர எண் | வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரரின் பதிவு தொகை ரூபா | கேள்விக் கட்டணத் தொகை ரூபா |
|---|---|---|---|
| எம். ரி 12 | திகண்ணவை குளம் சீர் திருத்தம் | 70,000 | 100 |

நீர்ப்பாசன இலாகாவின் மேற்குறித்த வண்ணம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்களை பொலநறுவை, கவுடுல்ல, மின்னேரிய ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் மேற்குறிப்புப்படி கேள்விக் கட்டணத்தை 1969 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி பி. ப. 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுத் புத்தகத்துடன் தாங்கள் தற்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி சமர்ப்பித்தல் அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க தகுதியுடையவரோ வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும்.

இக்கேள்விக்காகிய மேலதிக விபரங்களை மின்னேரிய உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் ஹிங்குரக்கொடை காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மின்னேரிய உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
ஹிங்குரக்கொடை,
1969 ம் ஆண்டு எப்பிரல் மீ 21 ந் த.

5–192—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

## வன திணைக்களம்

### குருநாகல் மாவட்டத்தில் மெல்சிரிபுர தாண்டிபல்லகெல என்னுமிடத்தில் ஹக்வடுன ஓயாவின் மீது தண்ணீரில் தாழக்கூடிய பாலம் கட்டுவதற்கான கேள்வி

மேற்கூறிய வேலைக்கு த. பெ. இல. 509, கொழும்பு 2 என்னும் விலாசத்திலுள்ள வன பாதுகாவல் அதிபரால் 1969 ம் ஆண்டு மே மாதம் 13 ம் திகதி காலை 10 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் கொழும்பு 2, கியூ ரோட்டிலுள்ள வனபாதுகாவல் அதிபரின் அலுவலகத்தில் பெறக்கூடிய குறிப்பிட்ட பத்திரத்தில் இரு பிரதிகளின் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. கேள்விப் பத்திரம் பெறுமுன் கோட்டையிலுள்ள இலங்கை வங்கி, யோக் வீதிக் கிளையில் (கணக்கு இல. 34) வன பாதுகாவல் அதிபரின் பேரில் ரூபா 100/- செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுச் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு மே மாதம் 13 ம் திகதி மாலை 4 மணி வரை கொடுக்கப்படும்.

4. மேற் கொண்ட விபரங்கள் (தேவையானவற்றின் அட்டவணை உட்பட) கொழும்பு 2, கியூ ரோட்டிலுள்ள வன பாதுகாவல் அதிபரின் அலுவலகத்திலோ அன்றி குருநாகல் பகுதி வன உத்தியோகத்தரிடமோ பெற்றுக்கொள்ளலாம்.

எம். எஸ். றணதுங்க,
பதில் வனபாதுகாவல் அதிபருக்காக.

வன பாதுகாவல் அதிபரின் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கியூ ரோட், கொழும்பு 2.

5–155—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

கொழும்பு உபபிரிவின் கீழ் உள்ள பண்டங்கள் சோதிக்கிறதும் ஆராய்ச்சி செய்கிறதுமான பரிசோதனைச் சாலையின் கீழ் தட்டும், முதல் தட்டும் கட்டுகிறதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 7 ல் உள்ள நீர்ப்பாசனத் திணைக்கள தலைமை அலுவலகத்தில், கேள்விச் சபையின் தலைவரால் 1969 ம் ஆண்டு மே மாதம் 25 ம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபாய் 1,00,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களும் அத்துடன் திறமையாகவும் தாமதமின்றி வேலையை முடிப்பதற்குரிய யந்திரங்களையுடையவர்களும் மாத்திரம் மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர். மேற்குப் பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்கள தலைமை அலுவலகத்தில், உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பு தவிர்த்த ஏனைய கச்சேரி ஒன்றில் ரூபா 250 கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாகக் கட்டி பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 21.5.69 வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் கொழும்பு 5 ல் உள்ள மேற்குப் பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டி. வி. எ. சேனாரத்ண,
நீர்ப்பாசன அதிபர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 27 ந உ.

5–146—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

## நாடு நகர நிருமாணப் பிரிவு, உள்ளூராட்சி அமைச்சு

### உத்தேச அலுவலகக் கட்டிடம் பெருப்பித்தல் நாடு, நகர நிருமாணப் பிரிவு, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தை கொழும்பு 10

உத்தேச அலுவலகக் கட்டிடம் பெருப்பித்தற்கான இலாஞ்சனையிட்ட கேள்வி இணைப்படிகளை 1969, மே மாதம் 25 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை கொழும்பு 10, டி. ஆர். விஜயவர்தன மாவத்தையில் உள்ள நாடு, நகர நிருமாணப் பிரிவின் கேள்விச் சபைத்தலைவர் ஏற்றுக் கொள்வார். அதே நாளில் நாடு, நகர நிருமாணப் பிரிவில் மு. ப. 10.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரரும் சமூகம் அளிக்கலாம்.

2. கேள்விகள் நாடு, நகர நிருமாணப் பணிப்பாளர், டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்ற கேள்விப்பத்திரப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரப்படிவங்கள் 1969, மே மாதம் 24 ஆம் திகதி பி. ப. 2.30 மணிவரை வழங்கப்படும். இவை சிவில் பொறியியலாளர் வேலைகளுக்காக 75,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் பதிவு செய்த தகுந்த ஆதாரத்தையும் கேள்வி வைப்பாக 100 ரூபாவையும் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்தில் உள்ள உள்ளூராட்சி அமைச்சிலாயினும் அல்லது கொழும்பிற்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலாயினும் கட்டிய பற்றுச்சீட்டை உடையவர்களுக்கு வழங்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விகள் அனுப்பலாம். அவை மேலே பந்தி 2 ல் குறிப்பிடப்பட்டதற்கான தொகையை ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலாவது பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்படியான சங்கங்கள் கேள்வி வைப்பில் இருந்து விதிவிலக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் இலாஞ்சனையிடப்பட்டு உறையின் இடப்பக்க மேல் மூலையில் " அலுவலகக் கட்டிடம் பெருப்பித்தல் " எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலிலோ அல்லது இந்நோக்கத்திற்காக நாடு, நகர நிருமாணப் பிரிவில் வைத்திருக்கும் கேள்விப் பட்டியில் இடப்பட்டோ அல்லது நாடு நகர நிருமாணப் பிரிவு அலுவலக உதவியாளரிடம் கையளித்ததற்கான ஒப்புக் கொள்ளுதலையோ பெறவேண்டும்.

என். குணரத்ன,
நாடு நகர நிருமாணப் பணிப்பாளர்.

நாடு, நகர நிருமாணப் பிரிவு,
உள்ளூராட்சி அமைச்சு,
டி. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
1969 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 28 ந உ.

5–182—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

---

## உணவு ஆணையாளர் இலாகா

330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவு ஆணையாளர் இலாகா கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், நிறுவைப் பாலங்கள், வழங்குதல், நிர்மாணித்தல், நிறுவை உட்பட்ட அத்திவார வேலைகள் ஆகிய வற்றை மேற்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்களை 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 2 ல் உள்ள உணவு ஆணையாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய பத்திரங்களில் இரு பிரதிகளில் செய்யப்படல் வேண்டும். 1969, மே மாதம் 30 ந் திகதி நண்பகல் 12 மணிவரை, கேள்விப் பத்திர உறுதிப் பணம் ரூபா 250 கொழும்பு 2 உணவு ஆணையாளர் காரியாலயத்தில் செலுத்திப் பெறும் பற்றுச் சீட்டின் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

1969, ஜுன் மாதம் 1 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு உணவு ஆணையாளரின் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விப் பத்திரதாரர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

முழு விபரங்களும், கொழும்பு 2, உணவு ஆணையாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பி. பி. வி. எ. ஜே. பி. சேனரட்ண,
உணவு ஆணையாளர்.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 29 ந உ.

5–199—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853.

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு ½ அங்குல அளவான கற்கள் 900 கன அளவுகள் எலிஸபெத் மஹா இராணி குதம் விஸ்தரிப்பு ஸ்தலத்தில் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1969, மேய் மாதம் 28 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1969 ம் வருடம் மேய் மாதம் 28 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969 ம் வருடம், மேய் மாதம் 26 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 ம் ஆடு மே மீ 9 ந உ.

5-170—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## கமத்தொழிற் சேவை இலாகா

### புத்தளம் மாவட்டத்தில் குறை ஆனமடுவ தானியக் களஞ்சியங்கள் முடிப்பதற்கான கேள்விகள்

புத்தளம் மாவட்டத்தில் குறை ஆனமடுவ தானியக்களஞ்சியங்கள் முடிப்பதற்கான கேள்விகள் 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகாவின் கேள்விச்சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு மே மாதம் 25 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் கட்டுப்பணமாக ரூபா 250/- (இருநூற்றி ஐம்பது)ஐ 60, கோட்டன் இடம், கொழும்பு 7 இல் உள்ள கணக்காளரிடம் கட்ட வேண்டும். அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டி பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அவை இரு பிரதிகளில் இருக்க வேண்டும்.

3. ரூபா 30,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் தங்கள் "பதிவுப் புத்தகத்தைக் காட்டி" படிவங்களை, 1969 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதி பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்கு குறித்த கால எல்லைக்குள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. 42, சேர் மக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வி. தி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு மே மாதம் 9 ம் திகதி.

5-168—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

எமது இல. பா/4/2/24

## அம்பாரைக் கச்சேரி

கீழ் குறிப்பிடும் வேலைகளுக்காக பொதுக் கேள்விப்பகுதி நீர்பாசன இலாகா அல்லது கல்விப்பகுதித் திணைக்களங்களில் கொந்திறுத்துக்காரர்கள், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் பிரத்தியேகமான கொந்திறுத்துக்காரர்களிடமிருந்து 1969 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி காலை 11.00 மணிவரைக்கும் அம்பாரை மாவட்ட அதிகாரியால் "சீல்" வைக்கப்பட்ட "ரெண்டர்" பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அக்கரைப்பற்று சின்ன முகத்துவாரம் வாடிவீட்டின் முன் மண்டபத்தில் உள்ள ஜன்னல்கள், கண்ணுடிகளைத் திருத்தி அமைத்தல்.

2. இத்தீவில் எக்கச்சேரியிலாவது ரூபாய் 10/- க்கு ரெண்டர் கட்டுப்பணமாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபரின் பெயருக்கு கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை ஒப்புவித்து அவசிய "ரெண்டர்" பத்திரங்களை அம்பாரை அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள நிர்வாகப் பகுதியில் பெற்றுக் கொள்ளவும். மேலும் முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சங்கங்களால் இப்பணம் கட்டவேண்டியதில்லை. "ரெண்டர்" பத்திரங்கள் பாரமெடுக்கும் கடைசித் திகதிக்கு முன்தினம் முற்பகல் 10 மணி வரைக்கும் "ரெண்டர்" பத்திரங்கள் கொடுக்கப்படும்.

3. இரு பிரதிகள் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரங்களை மாவட்ட அதிபர், அம்பாரை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் (பதிவுத்தபால் மூலம்). அப்படியில்லாவிடின் அம்பாரை மாவட்ட அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் "ரெண்டர்" பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் என்ன வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் எனக் குறிப்பிடல் வேண்டும். குறிப்பிட்ட பத்திரங்களில் தெளிவாக

எழுதப்படாதிருந்தால் அக்கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. 1969 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அப்படிக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது அவ்விடத்திற்குக் கேள்விப் பத்திரக்காரர் அல்லது அவரது கடிதத்தால் நியமிக்கப்பட்ட அவரின் பிரதிநிதி ஒருவர் சமூகம் கொடுப்பதற்கு இடமளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரக்காரருக்கு அதைப்பற்றி அறிவிக்கப்படும். கடிதத்தில் குறிப்பிட்ட திகதியில் இருந்து பதினன்கு நாட்களுக்கு தேவைப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கு அம்பாரை அரசாங்க அதிபரிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் முழுத்தொகையில் ஐந்து வீதம் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறினல் அவர் கட்டிய பணத்தை இழப்பதோடு ஒப்பந்தங்களை மீறுபவருக்கான பட்டியலில் அவரின் பெயரும் இடம்பெற நேரிடும்.

6. கடமை தவறிய கொந்தராத்துக்காரர் என்று அரசாங்கம் வேறு எந்தக் காரணத்துக்காக வேலையைச் செய்வதற்கு தகுதியற்றவர் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் நம்பினல் இவ் ஒப்பந்தத்தை ரத்துசெய்ய இடமுண்டு.

7. கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் சங்கங்கள் நிரந்தரமானதென்றும் தற்போது கடமைசெய்யும் கிராம முன்னேற்ற உப-தலைவர், கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி ஆணையாளர் அல்லது தொழில் உதவி ஆணையாளர் உட்படச் சார்ந்த உத்தியோகஸ்தர்களிடமிருந்து பெற்ற பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட சங்கம் கொந்தராத்துச் செய்வதற்குத் தகுதி வாய்ந்ததென்றும் அந்த உத்தியோகஸ்தரால் சிபார்சு செய்யப்படல்வேண்டும்.

8. ஏதேனும் ஒரு பகுதியை ஏற்கவோ நிராகரிக்கவோ அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

9. பத்திரத்தைப் பெற்றவர்கள் அதை முழுவதாகப் பூர்த்திசெய்து கேள்விப் பத்திரச் சபைக்கு அனுப்பாமல் இருப்பவருக்கும் குறிப்பிட்ட நிபந்தனையை மீறியவர்களுக்கும் குறிப்பிட்ட பத்திரத்தில் அல்லாமல் வேறு பத்திரத்தில் அனுப்பப்படும் கொந்தராத்துச் சொந்தக்காரர்களுக்கும் அவர்கள் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

10. இதைப்பற்றிய மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அம்பாரை மாவட்ட கச்சேரிக் காரியாலயத்திலுள்ள நிர்வாகப்பகுதிக் கந்தோரில் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வி. நாராயணசாமி,
மேலதிக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர்.

அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம்,
அம்பாரை,
1969 ம் ஆண்டு ஏப்ரல் மீ 27 ந் உ.

5-144—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## கமத்தொழிற் றிணைக்களம்

**அரசாங்க கமத்தொழில் பண்ணைகளுக்கு தண்ணீர்ப் "பம்ப்", ரெலி விநியோகித்தல், பாரம் கொடுத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

கீழ்க் காணப்படும் வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1969.5.28 ஆம் திகதி மு.ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிபர் (ப.மு.ஆ.) ஆல் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) கந்தளாய் கமத்தொழில் பண்ணைக்கு மேல்வரும் திட்டத்தின்படி மண்ணெண்ணெயால் இயங்கக்கூடிய 2 அங். "தண்ணீர்ப் பம்ப்" விநியோகித்தல் பாரம் கொடுத்தல்.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் உடனடியாக விற்பனைக்கு தமது கைவசமுள்ள இருப்பில் இருந்து விநியோகித்தல் பாரம் கொடுத்தல் வேண்டும்.

(அ) மண்ணெண்ணெயால் இயங்கக்கூடிய 2 அங். புதிய "தண்ணீர்ப் பம்பு", "சக்சன் 2 அங்", "டிலிவெறி 2 அங்" (வெளியேற்றுதல்).

(ஆ) சக்சன் (தண்ணீர் இழுக்கும் சக்தி) 25 அடி.

(இ) 50 அடி தலை (கெட்) மூலம் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்திற்கு 3,400 கலன் தண்ணீரை வெளியேற்றக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) தேவையான நேரத்தில் களட்டிப் பூட்டக்கூடிய வசதியுடையதாய் "பூட்வால்வ்" செம்பு (பிரூஸ்) கப்பிளின், தோல் (லெதர்) வாசர், ஹோஸ் ரைட்னர், செம்பு நிப்பிள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட 33 அடி நீள 2 அங். "அல்கத்தின் பைப்".

மேற்கூறிய திட்டத்திற்கமைய புதிய தண்ணீர்ப்பம்பு கேள்விக்காரரால் விநியோகித்தல் வேண்டும். பம்பு இணைக்கப்பட்டு பண்ணை அதிபரின் திருப்திக்கமைய வேலை செய்யத் தொடங்கியவுடன் பணம் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரத்துடன் விநியோகிக்கப்படும் "பம்பின்" விபரங்கள் அடங்கிய விளக்கத்தை இணைத்தல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட "தண்ணீர்ப் பம்பை" உபயோகிப்பதற்கு ஒரு "ரெலி" (வண்டில்) கந்தளாய் கமத்தொழில் பண்ணைக்கு விநியோகித்தல், பாரம் கொடுத்தல்.

ரெலிக்குரிய கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொண்டால் இந்த ரெலிக்குரிய அவசியமான உபகரணங்களுடன் பம்பு பொருத்தப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் விநியோகிக்கப்படும் ரெலியின் விபரங்களடங்கிய விளக்கத்தையும் இணைத்தல் வேண்டும். இதற்கு அறவிடும் தொகை வேருகக் குறிப்பிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறுன கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப.மு.ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "..........................................

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்த பின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப் பத்திரங்கள் ஒவ்வொரு

கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப.மு.ஆ.) தொடர்பு கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பண மாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள் விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத் தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப் பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக் காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி யாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத் தொழிற் கந்தோரில் (ப.மு.ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக் கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக் கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளி வாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்கார ரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முக வரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந் தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத் தத் தொகையில் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத் தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின் னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக் காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள் விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகர மாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தி யாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படி யான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ் வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்கு கள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவரா வார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதை யுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண் டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப் பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங் கீகாரத்தை பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழி யினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும். அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத் தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக் கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங் கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலைசம்பந்த மான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப் பத்திரகாரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்த ராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்ப தற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர் களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணை களுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.க வும் ப.)

பேராதனை.

5-141/1—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

## கமத்தொழிற் றிணைக்களம்

அரசாங்க கமத்தொழிற் பண்ணைகளுக்கு தெளிகருவி, தண்ணீர்த்தாங்கி, எள்ளுப்பிண்ணுக்கு ஆகியவை விநியோகித்தல் பாரம் கொடுத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

மேல்வரும் வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1969.5.28 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) ஏற்றுக் கொள்ளப்படும்.

(I) திருகோணமலை கமத்தொழிற் பண்ணைக்கு 3 தொன் எள்ளுப்பிண்ணுக்கு விநியோகித்தல் பாரம் கொடுத்தல்.

விநியோகிக்கப்படும் எள்ளுப்பிண்ணுக்கு நன்கு தூளாக்கப்பட்டதும், நன்றாகக் காய்ந்ததும் துப்பரவானதாயும், கால் நடை உணவிற்குத் தகுதியுடையதாகவும் இருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கேள்விக்காரர் கேள்விகள் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து இரு கிழமைக்குள் 1 தொன்னும் ஒரு மாதத்திற்குள் 1 தொன்னும் மீதி 1 தொன்னையும் 2 மாத காலத்துள் விநியோகித்து முடித்தல் வேண்டும்.

கேள்விக்காரர் திருகோணமலைக் கமத்தொழிற் பண்ணைக்கு பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்து பண்ணையில் இருக்கும் பண்டகசாலையில் இறக்குதலுக்குமாகச் சேர்த்து ஒரு தொன்னுக்கு அறவிடும் தொகை கணக்கிட்டு குறிப்பிட வேண்டும்.

(II) கிளிநொச்சி கமத்தொழிற் பண்ணைக்கு தண்ணீர்த் தாங்கி விநியோகித்தல் பாரம் கொடுத்தல்.

சிலிண்டர் வடிவுடைய தண்ணீர் சேகரித்து வைக்கும், விட்டம் 2′ 6″, நீளம் 4′ 0″, கனம் ¼″ அளவுகளைக் கொண்ட பி. ஐ. தகடுகளாலான தண்ணீர் தாங்கி ஒன்று. இரு பக்கங்களும் (மேல் கீழ்) மூடப்பட்டு ஒரு பக்கத்தில் 12″ அங்குல விட்டமுடைய துவாரம் மூடியுடன் இருப்பதுடன் பூட்டுக்களும் இணைப்பாணிகளுடனும் கறள்பிடியாத இரு முறை பூசப்பட்ட பூச்சுடனும் (பெயின்ற்) இருத்தல் வேண்டும். அத்துடன் ஒரு 1¼″ அங்குல அளவுடைய தண்ணீர் பெறும் குழாய் (ரப்) திடமாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒரு தாங்கிக்கு அறவிடும் தொகையையே குறிப்பிட வேண்டும். தாங்கி விநியோகித்தல் பாரம் கொடுத்தல் பண்ணை முகாமையாளரின் திருப்திக்கமைய 30.6.69 ஆம் திகதிக்கு முன்பாக முடிவடைதல் வேண்டும். தவணை கொடுக்கப்படமாட்டாது.

(III) சம்மாந்துறை (அம்பாறை மாவட்டம்), பரந்தன் கமத்தொழிற் பண்ணைகளுக்கு தெளி கருவி விநியோகித்தல் பாரம் கொடுத்தல்.

மருந்துத்தூள் விசிறும் கருவி இணைந்த முற்றும் காற்றினுல் குளிரப்படுத்தும் இயந்திரத்தினுல் இயங்கும் தெளிகருவி. இக்கருவியின் நிறை 20 றூத்தலுக்குக் கூடாமலும் 12 றூத்தல் மருந்துத் தூளுடன் 2 கலன் தண்ணீர் மருந்து கொள்ளக் கூடிய அளவினதாய் இருத்தல் வேண்டும். இத்தெளிகருவி மட்ட நிலையில் நிமிடத்துக்கு .15 கலன் தொடக்கம் .75 கலன் வரை இயங்கக்கூடியதாகவும், உயரத்திற்கு உந்தும் பொழுது நிமிடத்துக்கு .07 கலன் தொடக்கம் .60 கலன் வரை தேவைக்கேற்றவாறு 4 முறைகளில் கட்டுப்படுத்தி இயக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

தெளிகருவி குறைந்தது 10 யாருக்குக் குறையாமல் தெளிக்கக்கூடியதாகவும் தூள் விசிறி குறைந்தது 30 யாருக்கு குறையாமல் விசிறக்கூடிய சக்தி உடையதாகவும் இருத்தல் வேண்டும். இக்கருவி இதற்குத் தேவையான நடைமுறை ஆயுதங்களுடனும் அவசியமான உதிரிப்பாகங்களுடனும் விநியோகிக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரருக்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து 3 வார காலத்துள் தெளிகருவி தமது இருப்பில் (ஸ்ரொக்கில்) இருப்பவற்றுள் இருந்து விநியோகித்தல் பாரம் கொடுத்தல் முடிவடைதல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களினும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேருன கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல்வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "...................... (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா போராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினுல் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரகாரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 விதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும் ப.)
பேராதனை.

5-141/2—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## கடற்றொழில் திணைக்களம்

### பொல்லநறுவையிலுள்ள மீன் தடாகங்களை பழுதுபார்த்தலும், பராமரித்தலும்.

கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் இயக்குநர் பின்வரும் வேலைக்கு பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது :—

(1) பொல்லநறுவையிலுள்ள மீன் தடாகங்களைப் பழுதுபார்த்தலும், பராமரித்தலும்.

கேள்விப் பத்திரங்களும், ஏனைய விபரங்களும் கீழே கையொப்பமிடுபவரிடமிருந்து, 1969.5.25 ந் தேதி பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 1969.5.27 ந் தேதி முற்பகல் 10.30 மணிக்கு முடிவுறும். கேள்வி வைப்புப் பணம் ரூபா. 100/-.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3, ஏப்பிறல் 23, 1969.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணாந்து,
கடற்றொழில் இயக்குநர்.

5-26—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

### உபயோகமற்ற பொருள்கள் விற்பனை

**1969** ஆம் ஆண்டு மே மாதம் **27** ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை அரச கடற்படை, திருகோணமலை, டொக்யாடில் கிழே தரப்பட்டுள்ள உபயோகமற்ற பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**2.** விற்பனை செய்யும் பொருள்களை அன்று காலை 8 மணி முதல் பார்வையிடலாம்.

**3.** ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருள்களுக்கு உடனடியாக முழுப்பணமும் செலுத்தப்பட வேண்டும். ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருள்களை **1969 ஆம் ஆண்டு மே மாதம் 28** ஆம் திகதி பகல் **12** மணிக்கு முன்பாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஆர். கதிர்காமர்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை, கொழும்பு,
1969 ம் ஆண்டு எப்பிரல் மீ 29 ந உ.

| பதிவு | பொருள்கள் |
|---|---|
| 1 .. | வெற்றுத் தகரங்கள், வெற்றுச் சிமெந்துப்பைகள், சிங்க் பெல் பாஸ்ற், எதர்ன்வெயர் பைப்புகள், ஸ்ரென் சி. ஐ. முதலியன. |
| 2 .. | சிலின்டர் கெட்ஸ், கொனெக்ரிங் ரொட்ஸ், காம் ஷாவ்ற்ஸ், ஸ்பிறிங்ஸ், சிலிண்டர்கள், கார்பன் பிரஸ்ஸெஸ், பிஸ்ரன் றிங்க்ஸ், இன்டிக்கேற்றர் முதலியன. |
| 3 .. | ரெம்பரேச்சர் ஜேஜ், புஷ், பியறிங், சாவ்ற் வாட்டர் பம்பு, எக்ஸ்கோஸ்ற் வால்வ், வார்சேர்ஸ், சிலின்டர் கெட்ஸ், பிஸ்ரன்றிங்க்ஸ் முதலியன. |
| 4 .. | டி. சி. ஜெனரேற்றர்ஸ், மோட்டார் ஜெனரேற்றர்ஸ், ஸ்டாற்றர், மோட்டார், பட்டறிகள் முதலியன. |
| 5 .. | றெகுலேற்றர்ஸ், கொற் பிளேற்ஸ், பட்லொக்ஸ், கெட் போன்ஸ், பட்டறிகள், வெற்றுத் தகரங்கள், மக்ஸ், பிளேற்ஸ் முதலியன. |
| 6 .. | பலதரப்பட்ட கதிரைகள், மேசைகள். |
| 7 .. | மேசைகள். |
| 8 .. | பலதரப்பட்ட கதிரைகளும் செற்றீஸ்களும். |
| 9 .. | மரக்கதிரைகள், இரும்புக் கதிரைகளும் பார் கவுன்ரர் ஆடனும். |
| 10 .. | பலதரப்பட்ட மேசைகள். |
| 11 .. | கிறுங்க்ஷேவ்ற். |
| 12 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 13 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 14 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 15 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 16 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 17 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 18 .. | எண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் (46 கலன்கள்) |
| 19 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 20 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 21 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 22 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 23 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 24 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 25 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 26 .. | வெற்றுப் பெட்டிகள் |
| 27 .. | கேபிளும் கேபிள் பீப்பாக்களும் |
| 28 .. | கேபிள்ஸ், கப்பாசிற்றேர்ஸ்ம், பிளக்குகளும். |

5-166—9.5.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,853

---

## *பொலீஸ் அலுவலகம்*

### *ஏல விற்பனை*

*உபயோகிக்க இயலாத பொலீஸ் உத்தியோக உடைகள் பைசிகில்கள் மற்றும் பொருட்கள் முதலியன 1969 ம் ஆண்டு மே மாதம் 22 ம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9 மணியளவில் கண்டி பொலிஸ் நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

*பின்வரும் பொருட்கள் இவ் ஏல விற்பனையில் அடங்கும்.—*

(1) தொப்பிகள் (பெறே) 3.
(2) துணி துடைக்கும் பிறஷ்—16
(3) சப்பாத்து துடைக்கும் பிறஷ் 9,
(4) கென்வஸ் சப்பாத்து ஜோடி 125
(5) கிறுஸ் தொப்பிகள் 10
(6) பைசிகில் சங்கிலி 1
(7) தோட்ட முள்ளு 1
(8) காக்கி மழைக்கோட்டுகள் 65
(9) காக்கி புஸ்கோட்டுகள் 65
(10) காக்கி கட்டை களிசன் 125
(11) குசினிக் கத்திகள் 3
(12) காக்கி கால் மேஸ் 1 ஜோடி
(13) தோல் இடைவார்கள் 30
(14) ரவை போடும் தோல் உறைகள் 30
(15) பூட்ஸ் காலணிகள் 70
(16) மெகபோன்கள் 5
(17) தும்பு மெத்தைகள் 50
(18) மண்வெட்டிகள் 2
(19) பூட்டுச் சாவிகள் 86
(20) ஹோஸ் பைப்புகள் 2 துண்டு
(21) தொப்பிகள் 2
(22) நீட்டுக்கால் சட்டைகள் 16
(23) கால்களில் சுற்றும் பட்டிஸ்கள் 25 ஜோடி
(24) பெற்ரோமெக்ஸ் லாம்புகள் 2
(25) காக்கி மழைக்கோட்டுகள் 12
(26) கருப்பு மழைக்கோட்டுகள் 15
(27) ரப்பர் மழைக்கோட்டுகள் 3
(28) கிளொச் தொப்பிகள் 125
(29) நீட்டுமேஸ் ஜோடிகள் 15
(30) மழைக்கோட்டு வார்கள் 15
(31) சப்பாத்துகள் ஜோடி 700
(32) அளவு டேப்புகள் 2
(33) மேசை லாம்புகள் 5
(34) வெற்று கலன் டின்கள் 5
(35) அவசர சிகிச்சை பட்டிகள் 10
(36) பைசிகள் டியூப்கள் 2
(37) கலன் அளவுகள் 1
(38) புனல்கள் 2
(39) ரலீ பைசிகள்கள் 5
(40) தூக்கும் கடிகாரம் 1
(41) துணி விரிப்புகள் 30
(42) மரக்கட்டில் 1
(43) லாந்தர் 1
(44) வானொலிப் பெட்டி 1
(45) பிலாங்கட்டுகள் 9
(46) கையணிகள் 3
(47) ஸ்வெட்டர்கள் 9
(48) இலங்கை நிலப்படம் 1
(49) பைசிகள் லாம்பு 1
(50) பலகை ட்றே 2
(51) மைக்கூடுகள் 4
(52) நாற்காலிகள் 2

(53) மைக்கூடு வைக்கும் ஸ்டாண்ட் 1

(54) விசேஷ பொலீஸ் பெட்டன் தடிகள் 9

(55) ஏணிகள் 2

(56) கரம் போர்டு 1

(57) பொரியல் தாச்சி 1

மேற்கூறிய பொருட்களை ஏல விற்பனைக்கு முன் முதல் நாள் கண்டி பொலீஸ் நிலையத்தில் பார்வையிடலாம். விற்பனை முடிந்தவுடன் பணத்தை செலுத்தி பொருட்களை உடன் பெற்றுச் செல்லல் வேண்டும்.

பொலீஸ் அத்தியட்சகர்,
மத்திய மாகாணம் (வடக்கு)
கண்டி.

பொலீஸ் அலுவலகம்,
கண்டி, 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் திகதி.

5-32—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

## நானாவித அறிவித்தல்கள்

### நகரம் கிராமம் ஆதியவற்றின் பெயர்களுக்கு மீண்டும் பெயரிடுதல்

காலி மாவட்டம், பெந்தோட்டை வலல்லாவிட்டிக் கோறளை மேற்குக் காரியாதிகாரியின் பகுதியில் 10 ஆம் இலக்க இந்துறுவ கிராம சேவகரின் பிரிவில் அமைந்துள்ள "ஒலீகொட" எனப் பெயர் வழங்கும் கிராமத்தின் பெயரை "மெதகொட" என மாற்றி மீளப் பெயரிடுமாறு விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சொல்லப்பட்ட "ஒலீகொட" எனப் பெயர் வழங்கும் கிராமம் "மெதகொட" என மீளப் பெயரிடுதலையிட்டு பொது மக்களின் அபிப்பிராயங்கள் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது சம்பந்தமாக வேறும் அபிப்பிராயங்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கத்தாட்சியாயுள்ள எல்லாக் காரணங்களையும் எனக்கு அறிவிப்பதுடன் அவ்வாறான அபிப்பிராயங்களை மேற்குறித்த திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பி. ஏ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

காலிக் கச்சேரி,
1969 ம் ஆண்டு ஏப்ரில் மீ 26 ந் வ.

5-109—9.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,853

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

## இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும் மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படுதல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக் ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 00 .. | 60 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 00 .. | 42 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் .. .. | 43 50 .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 50 | .. 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப்பின் ஒவ்வொருபகுதியும் .. .. | 1 00 | .. 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 30 | .. 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப்பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 60 | .. 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | .. | 3.1.69 | வெள்ளி | .. | 24 12.68 செவ்வாய் | பி. ப. 3.30 |
| | | 9.1.69 | வியாழன் | .. | 3. 1.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 16.1.69 | வியாழன் | .. | 9. 1.69 வியாழன் | ந. ப. 12.00 |
| | | 24.1.69 | வெள்ளி | .. | 16. 1.69 வியாழன் | ந. ப. 12.00 |
| | | 31.1.69 | வெள்ளி | .. | 24. 1.69 வெள்ளி | ந. ப. 12.00 |
| பெப்புருவரி | .. | 7.2.69 | வெள்ளி | .. | 31. 1.69 வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 14.2.69 | வெள்ளி | .. | 7. 2.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 21.2.69 | வெள்ளி | .. | 14. 2.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 27.2.69 | வியாழன் | .. | 20. 2.69 வியாழன் | பி. ப. 3.30 |
| மாச்சு | .. | 7.3.69 | வெள்ளி | .. | 27. 2.69 வியாழன் | பி. ப. 3.30 |
| | | 14.3.69 | வெள்ளி | .. | 7. 3.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 21.3.69 | வெள்ளி | .. | 14. 3.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 28.3.69 | வெள்ளி | .. | 21. 3.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | .. | 3.4.69 | வியாழன் | .. | 27. 3.69 வியாழன் | பி. ப. 3.30 |
| | | 11.4.69 | வெள்ளி | .. | 31. 3.69 திங்கள் | பி. ப. 3.30 |
| | | 18.4.69 | வெள்ளி | .. | 8. 4.69 செவ்வாய் | ந. ப. 12.00 |
| | | 25.4.69 | வெள்ளி | .. | 18. 4.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 30.4.69 | புதன் | .. | 23. 4.69 வியாழன் | ந. ப. 12.00 |
| மே | .. | 9.5.69 | வெள்ளி | .. | 30. 4.69 புதன் | பி. ப. 3.30 |
| | | 15.5.69 | வியாழன் | .. | 9. 5.69 வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 22.5.69 | வியாழன் | .. | 15. 5.69 வியாழன் | ந. ப. 12.00 |
| | | 30.5.69 | வெள்ளி | .. | 22. 5.69 வியாழன் | ந. ப. 12.00 |
| யூன் | .. | 6.6.69 | வெள்ளி | .. | 30. 5.69 வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 13.6.69 | வெள்ளி | .. | 6. 6.69 வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 20.6.69 | வெள்ளி | .. | 13. 6.69 வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 27.6.69 | வெள்ளி | .. | 20. 6.69 வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது